EMS வைத்தியசாலை மட்டக்களப்பு
நவீன வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனை
விசேட வைத்திய நிபுணர் ஆலோசனைகள்
நவீன ஸ்கானிங் வசதிகள் (CT ஸ்கான், X-RAY, அல்ட்ராசவுண்ட் ஸ்கான்)
தனிப்பட்ட நோயாளர் தங்கும் அறைகள் (STANDARD,LUXARY, SURGERY CARE)
தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் குருதி சுத்திகரிப்பு பிரிவு
EMS HOSPITAL
Healing Hands..... Caring Hearts...
n010, d ltm nc, c, n
5 111 77 6 556 6008

Follow us:

# தமிழன்
THAMILAN தமிලன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 226 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(05.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 14, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

EMS வைத்தியசாலை மட்டக்களப்பு
நவீன வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனை

- சர்வதேச தரநிலை ஆபரேஷன் தியேட்டர்
- உயர்தர ஆய்வக சேவைகள் (Laboratory)
- அவசர சிகிச்சை பிரிவு (ETU)
- 24 மணி நேர மருந்தகம் (Pharmacy)
- அம்புலன்ஸ் சேவை
- 24 மணி நேர வெளி நோயாளர் பிரிவு (OPD)

n010, d ltm nc, c, n
5 111 77 6 556 6008



# விகாரையை அகற்றுக!

## போராட்டத்துக்கு சென்ற 5பேர் பலாலி பொலிஸாரால் கைது

## மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தை எம்.பிக்கள் பகிஷ்கரிப்பு





### தையிட்டியில் எம்.பிக்கள் கூட்டாக எதிர்ப்புப் போராட்டம்

02பக்கம்

## அறியாமை இருளை அகற்றும் பௌர்ணமி



### வெசாக் தினச் செய்தியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

மூவித இரத்தினங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட வெசாக் பௌர்ணமி தினம் பௌத்த நாட்காட்டியின் மிக முக்கியமான நாட்களில் ஒன்று என்பதோடு, இது புனிதத்துவமான முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது. 02 பக்கம்

## ஜனாதிபதி–தமிழ் எம்.பிக்கள் அடுத்த வாரம் தொடர் பேச்சு

### அதிகாரப் பகிர்வு, அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்படும்

நமது நிருபர்

இனப்பிரச்சினை தீர்வு விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் 02 பக்கம்

## புதிய வகை டெங்கு நோய் பரவும் ஆபத்து

### 03 நாட்களில் 700 பேருக்கு தொற்று

கே. சுபானி

நாட்டில் கடந்த மூன்று நாட்களுக்குள் 700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தற்போது... 02 பக்கம்



## மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு

கே. சுபானி

நாட்டில் மழையுடனான காலநிலை தொடரும் நிலையில், மூன்று மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதுளை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

விகாரை அமைக்க அனுமதி கொடுத்த வலி. வடக்கு பிரதேச சபை தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில இருக்குது... அனுமதி கொடுத்துப்போட்டு போராட்டமும் செய்யுறது என்ன டிசைனோ...?



## புதிய சட்டமூலத்தால் நாட்டுக்கு அச்சுறுத்தல்

### சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை

நமது நிருபர்

இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தால் நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. 02 பக்கம்

AMNESTY INTERNATIONAL

### உஷ்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு பெசில் ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனராம். ஆனால், அந்த கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டாராம் பெசில். பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தலாம் என்பதே பெசிலின் நிலைப்பாடாம்.

## இன்று இடம்பெறும் சந்திர கிரகணம்

2023ஆம் ஆண்டின் முதல் சந்திர கிரகணம் சித்திரா பௌர்ணமி தினமான இன்று இடம்பெறவுள்ளது. இது பகுதி சந்திர கிரகணமாகத் தெரியும் என வானியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்திர கிரகணத்தை ஐரோப்பா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, அண்டார்டிகா ஆகிய 5 கண்டங்களில் இருப்பவர்களால் பார்க்க முடியும். மேலும்... 02 பக்கம்





## மே 09 முதல் 12 வரை கூடுகிறது பாராளுமன்றம்

பாராளுமன்றம் எதிர்வரும் 09ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை கூடுவதற்கு கடந்த 28ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த நான்கு நாட்களும் சபை அமர்வுகள் இடம்பெறவுள்ளதுடன் வாய்மூல விடைக்கான... 02 பக்கம்

## பாலியல் நடவடிக்கைகளுக்கு சிறுமியரின் புகைப்படங்கள்

### பேஸ்புக் பக்கம் குறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பம்

சிறுமிகளின் மீது பாலியல் உணர்வுகளைத் தூண்டும் வகையில் அவர்களின் புகைப்படங்களைப் பயன்படுத்தும் பேஸ்புக் பக்கங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும்... 02 பக்கம்

## ஜனாதிபதி ரணில் பிரித்தானியா பயணம்

### பதில் அமைச்சர்கள் இருவர் நியமனம்

மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (04) காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து பிரித்தானியாவுக்குச் சென்றுள்ளார்.

அவருடன் மேலும் எண்மர் பயணம் செய்ததாக விமானநிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து டுபாய் ஊடாக பிரித்தானியாவுக்கு அவர் பயணமாகியுள்ளதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். 02 பக்கம்

## கஞ்சா, ஐஸ் பாவனை சடுதியாக அதிகரிப்பு

### புகைத்தல், மதுவால் வருடாந்தம் 40 ஆயிரம்பேர் உயிரிழப்பு

கே. சுபானி

நாட்டில் புகைத்தல் மற்றும் மது பாவனையால் ஆண்டுக்கு சுமார் 40ஆயிரம் பேர் உயிரிழப்பதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் ஷாக்கிய நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார். 02 பக்கம்

# பௌத்த விகாரைகளை போன்று ஏனைய வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்தடைந்து, மக்களின் வாழ்க்கை சீரழிந்து போயுள்ளதாகவும், ஜீவனோபாயத்தை நடத்த முடியாமல் மக்கள் ஆதரவற்ற நிலையிலுள்ளது. இவ்வாறான நிலையில் சசுனட அருண வேலைத்திட்டத்தின் ஊடாக பௌத்த மத விகாரைகளை புனரமைக்கவும், கத்தோலிக்க தேவஸ்தானங்களுக்கு திருத்தம், மஸ்ஜிதுகளுக்குப் புதுப்பொழிவு, தர்மத்தின் ஒளி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்க எதிர்பார்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவ்வாறே, மனித வாழ்வின் மிக முக்கியமான இரண்டு அம்சங்களான கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை கட்டியெழுப்ப பிரபஞ்சம் மற்றும் மூச்சு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சசுனட அருண வேலைத்திட்டத்தின் கீழ் 12 ஆவது திட்டமாக நிர்மாணிக்கப்பட்ட தூபி ஆணமடுவ துமிந்தராம விகாரைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று (04) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்திட்டங்கள் அனைத்திலிருந்தும் நாட்டை நாட்டைக் கட்டியெழுப்பவே எதிர்பார்ப்பதாகவும்,நாட்டை கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி பெரும் எதிர்பார்ப்பு கொண்டுள்ளது. இதனை மேற்கொள்வதற்கான துரித வழி தகவல் தொழில்நுட்ப ரீதியான ஏற்றுமதி திட்டமாகும். பிரபஞ்சம் போன்ற தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் நாட்டைக் கட்டியெழுப்பும் வகையிலையே செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பௌத்த விகாரைகள் போலவே ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்கும் உரிய இடத்தை அரசாங்கம் வழங்காவிட்டாலும், எதிர்க்கட்சி இந்த அனைத்து மத ஸ்தலங்களிலும் கவனம் செலுத்தியுள்ளோம். மத விகாரைகள் மூலம் புத்திஜீவிகளை உருவாக்கும் நிலையங்களாக உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.



பௌத்த மதத்திற்கு மாத்திரமன்றி ஏனைய மதங்களுக்கும் சமமான இடம் வழங்கி சக மதங்களின் இருப்புக்கு பாதுகாப்பு வழங்கப்படும்.இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 1, 125 தூபிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

கோரகஹயாய, ராமன்குளம், மஹகும்புக்கடை ஸ்ரீ துமிந்தராம விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட இந்த தூபி மகா சங்கத்தினரின் ஆசீர்வாதங்களுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று கையளிக்கப்பட்டது.

# தையிட்டி விகாரை விவகாரம் ஜனாதிபதியின் கவனத்துக்கு

## அத்துமீறல் இடம்பெற்றிருக்குமானால் ஏற்றுக்கொள்ள முடியாதென்கிறார் அமைச்சர் டக்ளஸ்



யாழ்ப்பாணம், தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பான ஆவணங்களை ஆராயவுள்ளதுடன் அதனை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்ல இருப்பதாகவும் தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அத்துமீறல்கள் இடம்பெற்றிருக்குமாயின் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (04) இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் சிறிய விகாரைகள் கடந்த காலங்களில் அமைக்கப்பட்டிருந்ததும் பின்னர் அந்தப் பகுதிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டபோது அவை அகற்றப்பட்டிருப்பதையும் சில இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையிலேயே, தையிட்டி விகாரை தொடர்பாக சில தரப்புக்களினால் தற்போது பேசப்படுகிறது.இதற்கான அடிக்கல் 2018 ஆம் ஆண்டு அப்போதைய வடக்கு மாகாண ஆளுநரினால் நாட்டப்பட்டிருக்கிறது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரிடம் கோரியிருக்கின்றேன் . அவற்றை ஆராய்வதுடன், விரைவில் ஜனாதிபதிக்கும் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பிலும் பிரஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றேன்.

வெடுக்குநாறி விவகாரத்தை சுமுகமான முறையில் தீர்த்து வைத்தது போன்று இந்த விடயங்களையும் ஜனாதிபதி சரியான முறையில் தீர்த்து வைப்பார்" என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்க திட்டங்களை வினைத் திறனாக யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கும் வகையிலும் பல்வேறு விடயங்கள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டன.

இதன்போது, நாட்டை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் வெற்றியடைந்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூர் உற்பத்திகள் தொடர்பில் மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், உள்ளூர் உற்பத்திகள் அறுவடை செய்யப்படுகின்ற காலப் பகுதிகளில், குறித்த பொருட்களுக்கான இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டு, தாராளமான சந்தை வாய்ப்பையும் சிறந்த விலையையும் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை அமைச்சரவை ஊடாக மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

### விகாரையை...

(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணம்,வலிகாமம் வடக்கு தையிட்டியில் பொதுமக்களின் காணியை அபகரித்து அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரைக்கு எதிராக நேற்றுமுன்தினம் முதல் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுவரும் நிலையில், பொலிஸாரின் தடையை மீறி நேற்று (04) அங்கு சென்ற யாழ். மாவட்ட தமிழ் எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் நீதிகோரி குரல்கொடுக்கப்போவதாகவும் கூட்டாக அறிவித்தனர்.

இதேவேளை, தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு போராட்டத்துக்குச் சென்ற ஐவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் இந்த விடயங்கள் தொடர்பில் நேற்று யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமது கடும் விசனத்தை வெளியிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

தையிட்டி பிரதேசத்தில் இதுவரை விடுவிக்கப்படாதுள்ள பொதுமக்களின் காணிக்குள் விகாரை அமைக்கப்பட்டு வருவதுடன் அதனைச் சுற்றியுள்ள ஏனைய காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பொதுமக்களும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி ந. காண்டீபன் உள்ளிட்டோரும் அவ்விடத்துக்குச் சென்று முற்றுகைப் போராட்டத்தில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். இதன் காரணமாக பெருந்திரளான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

அங்கு தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னெடுக்க பந்தல் அமைக்கத் தயாரானபோது பொலிஸார் அதனைத் தடுத்தனர். அத்துடன் போராட்டக்காரர்களை அச்சுறுத்தி அவர்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டோருக்கு உணவு, நீர் என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்காத நிலையில் மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் போராட்ட களத்துக்குச் சென்ற ஐவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி செயலாளர் கிருபா கிரிதரன், அக்கட்சியின் யாழ். மாவட்ட செயலாளர் பொன். மாஸ்டர் மற்றும் பந்தல் அமைக்கவந்த இருவரும் பந்தலை ஏற்றிவந்த வாகனத்தின் சாரதியும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, தமிழர்களின் பூர்வீகக் காணி அபகரிக்கப்பட்டு விகாரை நிர்மாணிக்கப்பட்டமைக்கு எதிராகவும் பொலிஸாரின் நடவடிக்கையை கண்டித்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமது விசனத்தை வெளியிட்டனர்.

**எம்.பிக்கள் வெளிநடப்பு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கூட்டத்தில் பங்கு பற்றி இடையில் வெளிநடப்புச் செய்தனர்.

தையிட்டியில் விகாரை கட்டப்படக்கூடாது என ஏற்கனவே யாழ். ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எனினும் ஒருங்கிணைப்பு குழுவில் எடுக்கப்பட தீர்மானத்துக்கு எதிராக விகாரை கட்டப்பட்டுள்ளது. அதேபோல தற்பொழுது எமது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட மேலும் இருவர் அங்கே முற்றுகைக்குள் உள்ளார்கள். எனவே பொலிஸார் மிகவும் மோசமாக செயற்பட்டு இருக்கிறார்கள். அமைதியாக இருந்த மக்களை விரட்டி அடித்திருக்கின்றார்கள். எனவே, நாங்கள் இந்த கூட்டத்தில் தொடர்ச்சியாக பங்கு பற்றுவது உசிதமல்ல என தெரிவித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை வெளிநடப்புச் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததுடன் அனைவரும் அங்கிருந்து வெளியேறினர்.

குறித்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா யாழ்ப்பாண பிரதி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டதோடு குறித்த விடயம் தொடர்பில் நீதிபதியை குறித்த இடத்துக்கு அழைத்துச் செல்வதும் மிக உசிதமான விடயம் எனவும் தெரிவித்தார்.

அதன் பிறகு தையிட்டியில் போராட்டகளத்துக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் உள்ளிட்டோரும் செல்வராசா கஜேந்திரன் எம்.பியுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை தோன்றியது. தமிழர்களின் பூர்வீக காணி அபகரிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டமை மற்றும் பொலிஸாரின் தகாத நடவடிக்கைக்கு எதிராக கடும் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக அங்கு வருகைதந்த தமிழ் எம்.பிக்கள் அறிவித்தனர்.

இதேவேளை, இன்று வெசாக் தினம் என்பதால் அங்கு பௌத்தர்கள் வழிபாட்டுக்கு வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தையிட்டி பகுதியில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***போராட்டம் நடத்த நீதிமன்றம் அனுமதி***

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிராக அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் மக்களின் உரிமையை தடுக்க முடியாது என மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட 5 பேரையும் பலாலி பொலிஸார், மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தினர். கைதானவர்கள் சார்பில் சட்டத்தரணி க.சுகாஷ் முன்னிலையாகினார்.

அமைதியான வழியில் போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்ததை சுட்டிக்காட்டியதையடுத்து, நீதவான் அவர்களை பிணையில் விடுவித்தார்.

விகாரைக்கு முன்பாக போராட்டத்துக்கு தடைவிதிக்க வேண்டுமென பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்தனர். சம்பவ இடத்துக்கு நேரில் வந்து பார்த்து விட்டு உத்தரவு வழங்குவதாக நீதவான் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் நேற்று மாலை போராட்டக்களத்துக்கு வந்த நீதவான், நிலைமைகளை அவதானித்த பின்னர் மக்களின் அமைதியான போராட்டத்துக்கு நிபந்தனையுடன் நீதவான் அனுமதியளித்தார்.

இதன்படி, விகாரைக்கு வருபவர்களுக்கு இடையூறு விளைவிக்காமல், விகாரையின் வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்காமல், வீதியை மறிக்காமல், சத்தம் எழுப்பாமல் போராட அனுமதியளித்தார்.

அத்துடன், விகாரைக்கு எதிரில் உள்ள வளவில் போராட்டம் நடத்த நீதவான் இடத்தையும் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

### கஞ்சா, ஐஸ்...

மேலும் நாட்டில் ஹெரோயின் பாவனை ஒப்பீட்டளவில் குறைந்துள்ள நிலையில் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப் பொருள் பாவனை அதிகரித்து காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஆண்டுக்கு 40ஆயிரம் பேர் புகைத்தல் மற்றும் மது பாவனையால் உயிரிழக்கின்றனர். இவ்வாறு புகைத்தல் மற்றும் போதைப்பாவனையால் 40 ஆயிரம் பேர் இறக்கின்ற நிலையில் மேலும் 40 ஆயிரம் சிறுவர்கள் புதிய போதைப் பாவனையாளர்களாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இன்றைய நிலையில் பார்க்கும் போது பெண்களும் போதைப் பாவனைக்கு உள்வாங்கப்படும் பல்வேறு உபாயங்கள் காணப்படுகின்றன.

அந்தவகையில் இலங்கையில் பெண்களிடையே போதைப் பாவனை மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகிறது. எனினும் அந்தவீதம் அதிகரிக்கக்கூடும். தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளுக்கு அருகில் மீண்டும் போதைப்பொருள் வர்த்தகர்கள் போதைப்பொருள் விற்பனைக்காக வரக்கூடும்.

பிரச்சினைகளை மறப்பதற்காக, உடற்சோர்வு, சந்தோசத்துக்காக என போதைப்பொருள் பாவிக்கின்றனர். எனினும் இவ்வாறு செய்யும்,சொல்லப்படும் காரணங்கள் ஹெரோயின்,கஞ்சா, ஐஸ், புகைப்பொருட்கள் மற்றும் மதுபானம் என்பவற்றின் பாவனையால் தீரப்போவதில்லை. மாறாக இருக்கும் பிரச்சினைகள் அதிகரிக்கவே செய்கின்றன.

குறிப்பாக பிரச்சினைகளை மறப்பதற்காக போதைப்பொருள் பாவிப்பதாக தெரிவிக்கின்றனர். ஆனால் போதைப் பாவனையால் இருக்கின்ற பிரச்சினைகள் அதிகரிக்கவே செய்கின்றன.

அதாவது தலைசுற்று, வாந்தி, வயிற்றுவலி ஏற்பட்டு இருக்கின்ற சந்தோசமும் பறிபோகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மண்சரிவு ...

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லை மற்றும் பசறை பிரதேச செயலாளர் பிரிவுகள், கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாத்தறை மாவட்டத்தின் கொடபொல, பஸ்கொட பிரதேச செயலக பிரிவுகளுக்கு நேற்றுமுன்தினம் மாலை 4.00 மணிமுதல் நேற்று மாலை 4.00 மணிவரை விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. அதன்படி மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யும் என்றும் ஊவா, வடமத்திய வடமேற்கு மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### ஜனாதிபதி ரணில் ...

இதேவேளை, ஜனாதிபதி பிரித்தானியாவுக்கு பயணமாகியுள்ளதன் காரணமாக அவர் வகித்த அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனும் நியமிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று (04) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய வகை டெங்கு...

புதிய வகை டெங்கு (பிறழ்வு) நோய் பரவி வருவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்புதிய வகை டெங்கு பரவலால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.இதற்கிடையே ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் குழந்தைகளிடம் டெங்கு நோய் எதிர்ப்பு சக்தி குறித்த ஆய்வை முன்னெடுத்துள்ளது.

நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் டெங்கு நோய் பரவலிலுள்ள வேறுபாடுகளை அறிந்துகொள்வது அவசியமாகும்.

ஆகவே, இந்த ஆராய்ச்சி டெங்கு தடுப்பூசி திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் நோய்த்தொற்றின் அபாயத்தை புரிந்துகொள்ள உதவுகின்றது.

அந்த ஆய்வின் முடிவில், நாட்டில் 24.8 வீதமான குழந்தைகளிடம் டெங்கு நோய் பரவல் காணப்படுவதாகவும் அதில் அதிகூடிய வீதத்தில் திருகோணமலையில் 54.3 வீதமாகவும் பதுளையில் 14.2 வீதம் அதிகுறைந்த வீதத்திலும் பதிவாகியுள்ளது.

கிராமப்புற (23.2) மற்றும் தோட்டப் பகுதிகளுடன் (9.4) ஒப்பிடுகையில் நகர்ப்புறங்களில் (35.8) நோய் தொற்று பரவல் வீதம் கணிசமாக அதிகரித்துள்ளது.

அந்தவகையில் மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆகவே டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் டெங்கு செயலணியை அணிதிரட்டுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேல் மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் டெங்கு நோயாளர்களை கட்டுப்படுத்தும் வகையில் மேல்மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு செயலணியை உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி மேல்மாகாண ஆளுநரின் பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு இவ்வாறு அறிவுறுத்தியுள்ளதுடன், இதற்கு அரச நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்திள்ளார்.

### புதிய...

உள்நாட்டில் அதிகரித்து வரும் போராட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக சர்வதேச நியமங்களுக்கு அமைவாக புதிய சட்டம் முன்மொழியப்பட வேண்டுமென அந்த சபை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது இலங்கையில் மனித உரிமைகளுக்கு அவசர அச்சுறுத்தலாக உள்ளது என்று ஆசியாவுக்கான சட்டப் பணிப்பாளர் கரோலின் நேஷ் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமானால் அமைதியான முறையில் போராடும், மனித உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் மக்களுக்கு எதிராக பயங்கரவாத குற்றச்சாட்டுகள் விதிக்கப்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுவடிவம் பெறும் இந்த சட்டமூலமானது முன்னைய கொடூரமான சட்டத்தை விடவும் ஆபத்தானது என்பது இலங்கை மக்களின் எதிர்ப்புக் குரலிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### இன்று ...

பசுபிக், அட்லாண்டிக், இந்தியப் பெருங்கடல் பகுதிகளிலும் தெளிவாகப் பார்க்க முடியும்.

இந்த பகுதி சந்திர கிரகணம் இலங்கை நேரப்படி இன்று இரவு 8.44 மணிக்கு தொடங்குகிறது.

இந்த கிரகணத்தின் உச்சம் இரவு 10.52 மணிக்கு ஏற்படும். இந்த கிரகணம் நாளை 06 ஆம் திகதி அதிகாலை 01.01 மணிக்கு நிறைவடைகிறது.

### பாலியல்...

குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் பாடசாலை செல்லும் வயதுடைய சிறுமிகளின் படங்களை வெளியிட்டு பல்வேறு நபர்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவதற்கு பேஸ்புக் பக்கத்தை நடத்துபவர்கள் செயற்படுவதாக தெரியவந்துள்ளது.

இந்த சிறுமிகளின் புகைப்படங்கள் அவர்களின் பெற்றோரின் பேஸ்புக் பக்கங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பக்க உறுப்பினர்களின் கருத்துக்களை தொடர்ந்து பதிவு செய்வதன் மூலம் அந்தக் கணக்கு பராமரிக்கப்படுகிறது.

தற்போது சம்பந்தப்பட்ட பேஸ்புக் பக்கத்தில் நான்காயிரத்து 600 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இது தொடர்பான பேஸ்புக் பக்கம் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் தகவல் கிடைத்து வருவதாகவும் அந்தத் தகவலுக்கு அமைய எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார தெரிவித்துள்ளார்.

### மே 09 முதல்...

கேள்விக்காக 09 ஆம் திகதி மாத்திரம் மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மே 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் செஸ் வரி தொடர்பான கட்டளை, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 8 கட்டளைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 3 ஒழுங்குவிதிகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்தை அடுத்து அனுமதிக்கப்படவுள்ளன.

அதனையடுத்து, பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறும்.

மே 10 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

மே 11 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. அதனையடுத்து தனியார் உறுப்பினர் சட்டமூலமான ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தை இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2328/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளதாகவும் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க மேலும் தெரிவித்தார்.

### ஜனாதிபதி...

வடக்கு – கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் அடுத்த வாரம் மூன்று நாட்கள் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இம்மாதம் 11,12,13 ஆகிய திகதிகளில் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து பேச்சுக்கான அழைப்பு அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ அழைப்பிதழ் இன்று அல்லது நாளை அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 11ஆம் திகதி பொதுப்பிரச்சினை தொடர்பாகவும் 12ஆம் திகதி அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் 13ஆம் திகதி அபிவிருத்தி தொடர்பாகவும் பேசப்படவுள்ளது.

அத்துடன், முதல் இரண்டு நாட்களும் மாலை 5 மணிக்கும், இறுதிநாள் மாலை 4.30 மணிக்கும் சந்திப்பு நடக்கவுள்ளது.

### அறியாமை...

இந்த நாள் கௌதம புத்தரின் பிறப்பு, புத்தத்துவம் மற்றும் சம்புத்த பரிநிர்வாணத்தின் புனித நிகழ்வை நினைவுபடுத்துவதோடு மனிதநேயம் மற்றும் கருணையுடன் கூடிய அறப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் கௌதம புத்தரின் போதனைகளுக்கு மரியாதை செலுத்துவதற்கான வாய்ப்பாகவும் இருக்கிறது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்து வரும் இந்த சவாலான நேரத்தில் காலத்தால் அழியாத கௌதம புத்தரின் தத்துவம் ஆறுதலுக்கான வழியாக அமைந்துள்ளது. எனவே, இக்கட்டான காலகட்டத்தைக் கடந்து இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதற்கான சவாலை முறியடிக்க, புத்தர் கூறியது போல் ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் ஒன்றிணைவது அவசியம். பௌத்த தத்துவத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கருணை (மெட்டா), இரக்கம் (கருணா), சாந்தம் (முதிதா) மற்றும் சகிப்புத்தன்மை (உபேக்கா) ஆகிய நான்கு நற்பண்புகளைப் பின்பற்றி நாம் அந்தப் பாதையில் பயணிக்க வேண்டும்.

வளமான இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப புத்தரின் போதனைகளின்படி அனைவரும் ஒத்துழைப்புடனும் ஒற்றுமையுடனும் அணிதிரளுமாறு இந்த புனித நாளில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வெசாக் அனுஷ்டானங்கள், அறியாமை இருளை அகற்றி இலங்கையை மறுமலர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் வரமாக அமையட்டும். அனைத்து உயிர்களுக்கும் இன்பமான வெசாக் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடுகளை ஆரம்பிக்க விரிவுரையாளர்கள் தீர்மானம்

## வேறு முறையில் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவிப்பு

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று (04) இடம்பெற்ற நிறைவேற்றுக் குழு கூட்டத்தின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம பன்னஹேக தெரிவித்தார். இதுதொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கி தொழிற்சங்க நடவடிக்கை எடுத்தமையினால், இதுவரையில் அந்த நடவடிக்கைகள் காலதாமதமாகி இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றன.

அரச வரிக்கொள்கைக்கு எதிராகவே இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழக கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்காமலிருக்கவும் இதற்கு முன்னர் தீர்மானித்திருந்தார்கள். இருந்தபோது உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்ந்து கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையிலேயே விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க விரிவுரையாளர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீண்டும் நாடு திரும்பியதும் கலந்துரையாடலொன்றை பெற்றுக்கொடுப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். கலந்துரையாடல் எமக்கு அவசியமில்லை. மக்களுக்குள்ள பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுப்பதே எங்களின் முக்கிய தேவையாகும். மக்களின் சார்பாக இந்த தீர்மானத்தை எடுத்தோம்.

எங்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்களை விடுத்தார்கள். ஆனால், அவை எதுவும் இடம்பெறவில்லை. இதுவரையில் எங்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த தொழிற்சங்க நடவடிக்கையை நிறைவு செய்துவிட்டு, வேறொரு முறையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

கலந்துரையாடல்கள் தொடர்பில் எங்களுக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதியுடன் நேரடி பேச்சுவார்த்தை எங்களுக்கு அவசியம் என்று அவர்களுக்கு நேரடியாக அறிவித்திருந்தோம். தொடர்ச்சியான விடுமுறைகளை அடிப்படையாக கொண்டு இந்த கலந்துரையாடலை காலந்தாழ்த்தி வருகிறார்கள். எனவே, கலந்துரையாடலுக்கு ஏற்பாடுகளை செய்வதில் அவர்களுக்கு அக்கறை இருப்பது போன்றும் தெரிகிறது.




இருந்தபோதும், இவர்களின் செயற்பாடுகளுக்காக மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை என்பதாலே இத்துடன் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை நிறைவு செய்துகொள்ள தீர்மானித்தோம்.

எங்களின் கோரிக்கைகள் நியாயமானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வரிக் கொள்கையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தியே, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி எங்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம் என்று குறிப்பிட்டார்.

# வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

விகாரைகள், வெசாக் வலயங்கள் உள்ளிட்ட பல்வேறு சமய வழிபாடுகள் முன்னெடுக்கப்படும் இடங்களுக்கு அண்மையில் இவ்வாறு பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் கொழும்பில் நேற்று (04) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதேவேளை, வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு உறவினர்களை சந்திப்பதற்கு விசேட வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. அதற்கமைய, இன்றும் (05) நாளையும் (06) கைதிகளை பார்வையிடுவதற்காக உறவினர்களுக்கு நேரம் ஒதுக்கிக்கொடுக்க சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கைதிகளின் உறவினர்களால் எடுத்துவரப்படும் உணவுப் பொதிகள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் ஒருவருக்கு மாத்திரம் போதுமான வகையில் பெற்றுக்கொடுப்பதற்கு இரு நாட்களிலும் வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

இதேவேளை, நேற்றிலிருந்து (04) தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு நாடு முழுவதும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவளை, கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

# சுருக்குவலைத் தொழிலில் கணிசமான வீழ்ச்சி

## கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

கடற்றொழில் அமைச்சரின் காத்திரமான நடவடிக்கைகள் காரணமாக வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வந்த சுருக்கு வலைத் தொழில் கணிசமானளவு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சட்டவிரோத தொழில்முறையை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று (04) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

# ஹிங்குராங்கொட சிவில் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்ற ஆலோசனை



ஹிங்குராங்கொட சிவில் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னேரிய விமான நிலையம் என அழைக்கப்படும் ஹிங்குராங்கொட சிவில் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது. அமைச்சில் நேற்றுமுன்தினம் (03) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஹிங்குராங்கொட விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கான யோசனையை முன்வைத்தார்.

ஹிங்குராங்கொட விமான நிலையத்தை சர்வதேச சிவில் விமான நிலையமாக மாற்றுவதன் மூலம் பொலன்னறுவை, அநுராதபுரம், சிகிரியா மற்றும் தம்புள்ளை பகுதிகளுக்கு விஜயம் செய்வதற்கான வசதியை பெறமுடியுமென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

குறித்த அபிவிருத்தி மூலமாக வரலாற்று மற்றும் சமய தலங்களுக்கு அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பதோடு, நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிக்கவும் உதவுமென அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய 2,287 மீற்றர் ஓடுபாதையை 2,800 மீற்றர் வரை நீட்டித்தல், விமான நிலைய ஓடுபாதைக்கு வழி அமைத்தல் மற்றும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மையம் (ATC), விமான நிலைய பயணிகள் முனையம் கட்டுதல் என்பன அத்தியாவசிய நடவடிக்கைகளாக மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

குறித்த விமான நிலையத்தின் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் தற்போது இலங்கை விமானப்படையின் கீழ் உள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

# மனித நேயத்துடன் மத நல்லிணக்கத்தைப் போற்றுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெசாக் தின வாழ்த்து

இலங்கையர்களுக்கும் உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் வெசாக் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது வெசாக் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரின் வாழ்த்துச் செய்தியில்,

கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் மற்றும் இறப்பு ஆகியவை பௌத்தத்தின் மிகப்பெரிய பண்டிகையாகும். இது உலகின் பௌத்த மக்களால் மிகுந்த நம்பிக்கையுடன் கொண்டாடப்படுகிறது.

இவ்வுலகில் நிலைநாட்டப்பட்ட தோற்கடிக்க முடியாத தத்துவத்தை உலகுக்கு அருளியவர். பிரபஞ்சத்தில் உள்ள பூரண உண்மையைக் கண்டு, புத்தபிரான் உபதேசித்த ஸ்ரீ சதர்மம் நிரந்தரமானது என்பதை நாளுக்கு நாள் நிரூபித்து வருகிறது.

பௌத்த சகாப்தம் எப்பொழுதும் பௌதிக வாழ்க்கையை போஷித்து, அதன் அடிப்படையில் ஆழ்நிலை வாழ்க்கையை வளர்க்க நடைமுறைச் செயல்களின் ஒழுங்கைக் காட்டியுள்ளது. மேலும் அந்தக் கண்ணோட்டத்தில், பௌத்தம் மிகவும் அடிப்படை மற்றும் மேம்பட்ட வாழ்க்கை முறையாகும்.



தர்மம் என்றால் என்ன என்ற கேள்விக்கு பதிலளித்த புத்தர், "யோ தம்மன் பஸ்ஸதி, ஸோ மன் பஸ்ஸதி யோ மன் பஸ்ஸதி ஸோ தம்மன் பஸ்ஸதி ".

எவன் தர்மத்தைப் பார்க்கிறானோ அவன் என்னைப் பார்க்கிறான். எவன் என்னைப் பார்க்கிறானோ அவன் தர்மத்தை பார்க்கிறான்.

புத்தபெருமானின் தர்மம் உலக உயிரினங்கள் அனைத்துக்கும் தனித்துவம் மிக்க கருணை நிரம்பிய தர்மமாகும். மனித இனம் முழுவதற்கும் இணக்கமான நடைமுறையை வழிநடத்தும் தூய தர்மத்தால் ஈர்க்கப்பட்டு, மனித நேயத்துடன் மத நல்லிணக்கத்தைப் போற்றும் ஒவ்வொருவரும் இருந்தால், அவர்கள் பௌத்தத்தை உண்மையாக பின்பற்றுபவர்கள் ஆவர்.

எனவே, உலகின் மிகப் பெரிய தர்மத்தில் தஞ்சம் புகுந்த உன்னத குடிமக்களாக, உலக உயிரினங்கள் மீது கருணை, பாசம் மற்றும் அன்புடன் மகத்தான வெசாக் நாட்களைக் கொண்டாடுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.





வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு மின்விளக்கு அலங்கார செயற்பாடுகள் நேற்று (04) கொழும்பில் ஆரம்பமாகின.

(படப்பிடிப்பு – ஏஷான் தசநாயக்க)

# பொரளை தனியார் வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை இடைநிறுத்தம்

சிறுநீரக மோசடி இடம்பெற்றதாக கூறப்படும் பொரளை தனியார் வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கான அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொரளையில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் இடம்பெற்ற சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, குறித்த வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கான அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பரிந்துரை செய்துள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த தனியார் வைத்தியசாலையில் உரிய விசாரணைகள் முடியும்வரை அனைத்து சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளையும் இடைநிறுத்துமாறு அக்குழு பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று (04) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள். மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**ரிஷபம்:** சுயத்தொழில் மூலம் நன்மைகள், இலாபங்கள் உண்டு. உடல், மன நோய்களால் சற்று தொந்தரவுகள் உண்டு.

**மிதுனம்:** வீணான மனக் கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களை குறைத்துக் கொள்வது நல்லது.

**கடகம்:** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**சிம்மம்:** உங்கள் தேவைக்காக பணம் கிடைக்கும். மனத் துணிவுடன் உங்கள் காரியங்களில் வெற்றி கொள்வீர்கள்.

**கன்னி:** யாருக்கும் வாக்களிக்காதீர்கள், கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்தும், எச்சரிக்கை வேண்டும்.

**துலாம்:** மனதில் ஒருவித பய உணர்வு, படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**விருச்சிகம்:** தேவையற்ற பயணங்களையும் செலவுகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**தனுசு:** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** நீங்கள் தொழிலில் எதிர்ப்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**கும்பம்:** இன்று உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் பொருளாதாரச் சிக்கல்களை சந்திப்பீர்கள்.

**மீனம்:** எதற்கும் அவசரம் வேண்டாம். மௌனம் காப்பது, தேவையற்ற டென்ஷனால் மனதையும் உடலையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**திதி** : பௌர்ணமி பி.ப.11.03 வரை பின் பிரதமை (தேய்)

**நட்சத்திரம்** : சுவாதி பி.ப.9.39 வரை பின் விசாகம்

**யோகம்** : அமிர்தசித்த யோகம்

**வார சூலை** : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 5.53 – 6.53 மணிவரை

**ராகு காலம்** : 10.23 – 11.53 மணிவரை

**எமகண்டம்** : 2.53 - 4.23 மணிவரை

**குளிகை** : 7.23 – 8.53 மணிவரை

**சந்திராஷ்டமம்** : மீனராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** : சித்திரா பௌர்ணமி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# இலங்கைக்கு யூரியா - MOP உரங்களை வழங்குவதற்கு ரஷ்ய அரசாங்கம் இணக்கம்

இலங்கையின் விவசாய நடவடிக்கைகளுக்காக யூரியா மற்றும் MOP உரங்களை வழங்குவதற்கு ரஷ்ய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நிலவும் இருதரப்பு ஒத்துழைப்பின் அடிப்படையிலும் இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் நட்புறவை உறுதிப்படுத்தும் வகையிலும் யூரியா மற்றும் MOP உரங்களை வழங்க ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ்.தகாரியன் மற்றும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோருக்கு இடையில் விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான யூரியா மற்றும் MOP உரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனவும் ரஷ்ய தூதுவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இங்கு விவசாய அமைச்சர், அடுத்த பருவம் ஆரம்பிக்கும் முன் விவசாயிகளுக்கு யூரியா மற்றும் MOP உரங்களை வழங்குவதற்கான



பணிகளை தொடங்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.


# வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, மே 05ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பரிசீலிக்கப்பட வேண்டிய இடைக்கால சபை விடயம்

மாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்படாமலிருக்கும் சூழலில், வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தைக் கவனிக்கவும், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவும், பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறவும் ஒரு பொறிமுறையாக - இடைக்கால சபையொன்றை நிறுவும்படி ஜனாதிபதியிடம் கோரும் நகர்வு தமிழ்த் தரப்பில் சில அணிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

எனினும், இந்த யோசனைக்கு பிரதான தமிழ்க் கட்சிகள் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லையென தெரிகிறது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி கே.விக்னேஸ்வரனின் யோசனையின் அடிப்படையில் இந்த வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த வரைபின்படி, அடுத்த 6 மாதங்களுக்கு வடக்கு, கிழக்கிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால சபையொன்றை நிறுவும்படியும், இந்த காலத்திற்குள் இரண்டு மாகாணசபைகளின் தேர்தலை நடத்த வேண்டாமென்றும், 6 மாதங்களின் பின்னர் தேர்தலை நடத்தும்படியும் கோரப்பட்டுள்ளது.

அந்த வரைபில்-

''அரசியலமைப்புச் சட்டத்தின் (பிரிவு 154L) விதிகளின்படி மாகாண நிர்வாகத்தை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் ஜனாதிபதியிடம் தெரிவிக்க வேண்டும். அந்த மாகாண சபையின் சட்டங்களை உருவாக்குவதற்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குவதற்கும், அவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஜனாதிபதியால் குறிப்பிடப்பட்ட அதிகாரத்திற்கு வழங்குவதற்கும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. (அரசியலமைப்பு விதி 154M.) அந்த அதிகாரம் அந்த மாகாணத்திற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் குழுவாக இருக்கும். எங்கள் பார்வையில், அத்தகைய சபை, மாகாணத்தில் செயல்படும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றின் ஒரு பிரதிநிதியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேலும், அவை 13 திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அழைப்பு விடுத்துள்ளன.

ஆலோசகர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ, மாகாண சபைகளின் உறுப்பினர்களாகவோ அல்லது எந்தவொரு உள்ளூராட்சி சபையின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களாகவோ அல்லது அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையில் பணியாற்றும் அதிகாரியாகவோ இருக்கக்கூடாது. குடியரசுத் தலைவர் தனது சட்டங்களை உருவாக்கும் அதிகாரங்களை ஆலோசகர்கள் குழுவிற்கும் மற்றும் அவர் தேவையெனக் கருதும் பிற செயற்பாடுகளுக்கும் வழங்குவார். அத்தகைய சபை தேவைப்படும்போது சட்டங்களை உருவாக்கி, ஆளுநரின் ஒப்புதலுக்காக அதைச் சமர்ப்பிக்கும்.

மாகாணத்தின் பிரதம செயலாளர் ஆலோசகர் குழுவின் செயலாளராக இருப்பார். அவர் மாகாணத்தின் பதிவேடுகளின் மொழியில் பதிவுகளை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு அதிகாரியாக இருக்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பதிவு மொழி தமிழ். ஜனாதிபதி மாகாணத்திற்கு ஒரு அட்வகேட் ஜெனரலையும் நியமிக்க வேண்டும் அல்லது மாற்றாக மாகாண ஆளுநருக்கு ஒரு சட்ட ஆலோசகரை நியமிக்க வேண்டும். இந்த அதிகாரியின் முக்கிய செயற்பாடுகள் சட்டங்களை தயாரிப்பது தொடர்பான சட்ட ஆலோசனைகளை வழங்குவதாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புகளை இந்த குறிப்பாணையின் இணைப்பில் வழங்குகிறோம். அத்தகைய மறுசீரமைப்பு சுமார் ஆறு மாதங்கள் எடுக்கும் என்பது எங்கள் மதிப்பீடாகும். எனவே, மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்தவுடன், தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை 2024 ஜனவரி மாதத்தின் இரண்டாம் பாதியில் கோரலாம் என்றும், வகுக்கப்பட்ட நடைமுறைகளின்படி தேர்தலை நடத்தலாம் என்றும் நாங்கள் வலியுறுத்துகிறோம்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் கையொப்பத்துடன் இந்த ஆவணத்தை தயாரித்து, ஜனாதிபதியிடம் வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த யோசனையில் அகில இலங்கை தமிழர் மகாசபை, ஈழவர் ஜனநாயக கட்சி (ஈரோஸ்), சமத்துவக்கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி (பத்மநாபா அணி), தமிழ் மக்கள் கூட்டணி (க.வி.விக்னேஸ்வரன் தரப்பு) ஆகியன இதுவரையில் கையெழுத்திட்டுள்ளன.

எனினும், பிரதான கட்சிகள் இந்த யோசனையில் உடன்படவில்லையென அறியமுடிகின்றது. தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) ஆகிய கட்சிகள் இந்த வரைபில் கையெழுத்திடுவதில்லையென தீர்மானித்துள்ளன.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) ஏனைய தமிழ் தரப்புகளுடனும் கலந்துரையாடி, பொது முடிவொன்றை எட்ட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளது.

கலாநிதி விக்னேஸ்வரனின் இந்த ஆலோசனை வரவேற்கப்படக்கூடியது என்றாலும் இந்த வரைபு மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் விருப்பத்தில் உள்ள ஜனாதிபதிக்கு மேலும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நிலைமை உருவாகிவிடலாம்.

ஏற்கனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தென்னிலங்கை ஆட்சியாளர்களிடமும், தற்போதைய ஜனாதிபதியிடமும் பல்வேறு அரசியல் நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 13ஆவது திருத்தத்தை தீர்வாக ஏற்காத போதிலும், இடைக்கால ஏற்பாடாகவே மாகாணசபை முறையை நடைமுறைப்படுத்தக் கோரப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் அவருடன் தீர்வு விவகாரம் பற்றி தமிழ்க்கட்சிகள் நீண்ட பேச்சு நடத்தியிருந்தன. ஆனாலும், ஜனாதிபதி இதுவரை எதையும் செய்யவில்லை. மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவது, அரசியலமைப்பின் மாற்றத்தின் மூலம் அதிகபட்ச அதிகார பரவலாக்கல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இப்போதைய சூழ்நிலையில், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால சபை கோரிக்கையானது விவகாரங்களை திசைதிருப்பி விடும் அபாயம் இருக்கிறது.

ஆனால், இதில் சில சாதகமான பக்கங்களும் உள்ளன. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படாமல் இருக்கும் சூழலில், அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ள சூழலில், அவற்றை திரும்பப் பெற்று, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் ஒரு பொறிமுறையாக இந்த வரைபைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

நிறுவப்படும் இடைக்கால சபை, ஒவ்வொரு விவகாரமாக மத்திய அரசுடன் பேசி, பறிக்கப்பட்ட அதிகாரங்களை சுட்டிக்காட்டி, மீளக் கோருவார்கள். அரசாங்கம் அதைத் தர வேண்டும். அப்படித் தராமல் மறுக்கும் பட்சத்தில் அரசாங்கத்தின் உண்மை முகத்தை சர்வதேசத்திற்குக் காட்டும் வாய்ப்பேற்படும்.

அதிகாரங்களை மீளப்பெறுவதற்கான பொறிமுறையாக இதனை பயன்படுத்தலாம். இந்த செயல்முறையை நடைமுறைப்படுத்தும்படி இப்பொழுது ரணிலுக்கு அழுத்தம் கொடுக்கும் வாய்ப்புகள் உள்ளன. தமிழர் இனப்பிரச்சினை விவகாரத்தை சரியாகக் கையாள முடியாத காரணத்தினால்தான், ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை இந்தியா செல்ல முடியாமல் இருக்கிறார். இனப்பிரச்சினை விவகாரத்தில் உருப்படியான ஒரு நகர்வை செய்யாமல் அவரை இந்தியா வரவேற்காது. இந்த பின்னணியில், தமிழ்த் தரப்பினர் இப்போது புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும். அந்த அடிப்படையில் கலாநிதி விக்னேஸ்வரனின் இடைக்கால சபை விடயம் தட்டிக்கழிக்கப்பட முடியாத ஒன்று. அது தீவிரமாக விவாதிக்கப்படவேண்டும்.

# அவரவர் மார்க்கம் அவரவருக்கு!

**கே.எம்.காதர் மொகிதீன்**
*தேசிய தலைவர்,*
*இந்திய யூனியன் முஸ்லிம் லீக்.*

இஸ்லாம் என்றால் 'முற்றிலுமாகச் சரணடைதல்' என்பது பொருள் என அறிஞர்கள் கூறுகிறார்கள். தன்னைப் படைத்த இறைவனுக்கு முற்றிலுமாக சரணடைதலை இஸ்லாமிய மார்க்கம், இஸ்லாமிய நெறி, தீனுல் இஸ்லாம் என விவரித்து வருவது உலகியல் ஆகும்.

"எப்படி மனிதன் இருக்க வேண்டுமோ, அப்படி இருந்தால் அதுவே இஸ்லாம்'' என்று ஈரோட்டுக் கவிஞர் தமிழன்பன் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய இயற்கை நெறியைப் பின்பற்றி, நம்பி, நடைமுறைப்படுத்தி வாழ்வோரே 'முஸ்லிம்' என அழைக்கப்படுகின்றனர்.

ஒரு முஸ்லிமின் வாழ்கையில் இரு கூறுகள் மிகவும் குறிப்பிட்டுரைக்க வேண்டியவை ஆகும். முதலாவது நம்பிக்கை. இரண்டாவது நடைமுறை.

முதலில் இறைவனை நம்புவதாகும். இரண்டாவது வானவர்களை நம்புவதாகும். மூன்றாவது இறைவனால் அருளப்பட்டுள்ள வேதங்களை நம்புவதாகும். நான்காவது இறைவனால் அனுப்பப்பட்டுள்ள தீர்க்கதரிசிகளை நம்புவதாகும். ஐந்தாவது இறுதித் தீர்ப்பு நாள் வரும் என்றும் அப்போது மாண்டவர்கள் அனைவரும் உயிர்த்தெழச் செய்யப்படுவர் என்றும் அவர்கள் உலக வாழ்வில் நன்மைகள் செய்திருப்பின், சுவர்க்கம் பெறுவர் என்றும் தீமைகளில் மூழ்கியிருப்பின் நரக நெருப்பில் இடப்படுவர் என்றும் நம்புவதாகும்.

இஸ்லாம் மார்க்கத்தில் இறைவனை 'அல்லாஹ்' என்று குறிப்பிடப்படுகிறது. இறைவனைக் குறிக்கும் இந்தச் சொல், திருக்குர்ஆன் வேதத்தில் உள்ள 6666 திருவசனங்களில் ஏறத்தாழ 3 ஆயிரம் இடங்களில் அதே சொல்லாகவோ அல்லது அதற்குரிய விளக்கமாகவோ வருகிறது என்பது அபூர்வமான செய்தியாகும்.

இறைவனைக் குறிக்கும் இந்த 'அல்லாஹ்' எனும் சொல், விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் 89 இடங்களில் வருகின்றது என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'தி கீதா அன்ட் தி குர்ஆன்' என்னும் நூலில் பண்டிட் சுந்தர்லால், இந்தியாவில் ரிக்வேத காலத்தில் "அல்லாஹ்வை இறைவனாகப் போற்றி வணங்கிய கூட்டம் ஒன்று இருந்தது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இயேசுபெருமானுக்கு அருளப்பட்டதாக நம்பப்படும் 'இன்ஜீல்' என்னும் வேதத்தில், அதாவது விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் அல்லாஹ் என்பது 'எல்' என்று வருகிறது என்ற கருத்தை இலங்கை ஆய்வாளர் ஜோர்ஜ், மதுரையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் தனது ஆய்வுரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஏசுபெருமான் 'எல். ஈ. எல். ஈ.' என்று, அதாவது "என் இறைவனே என் இறைவனே'' என்று அழைத்தார் என்று கூறியிருக்கின்றார்.

'எல்' என்பது தொல்காப்பியத்தில் 'எல்லே இலக்கம்' என்னும் சூத்திரத்தில் இடம்பெற்றிருக்கும் சொல்லாகும். இதற்கு விளக்கம் கூறிய ஆய்வறிஞர்கள் ஒளிபொருந்திய செம்பொருளை 'எல்' குறிப்பிடுகிறது என்றும், இதுவே காலப் போக்கில் 'எல்லா' எனவும் 'இலகா' எனவும் அல் இலாக ஆகவும் அதுவே 'அல்லாஹ்' ஆகவும் பரிணமித்திருக்கிறது என்று கூறியுள்ளார்கள்.

கற்பனைக் கெட்டாத வெட்ட வெளியில் தானே வெளிக் கிளம்பி, பிரவாகம் எடுத்திருக்கும் ஒளி வெள்ளம் என்பதைத்தான் 'அல்லாஹ்' என்றும், 'எல்' என்றும் அழைத்து வந்துள்ளனர் என்பதை வரலாற்றுப் பாதை நெடுகிலும் பார்க்கிறோம்.

அப்பர் சுவாமிகள் கூறியிருப்பதை இங்கே




குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். அவர்,

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதித்
காட்டொணாதே'

என்று இறைவனைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இரண்டாவதாக, வானவர்களை நம்புவதாகும். வானவர் என்போர் ஒளியால் படைக்கப்பட்டிருக்கிறார்கள். இறைவனின் கட்டளைப்படி அனைத்தையும் செய்யக் கூடியவர்கள். இந்த வானவர்களில் தலையாய வானவர் 'ஜிப்ரயீல்' எனப்படுகிறார். இறைவன் புறத்தில் இருந்து, மனிதர்கள் மத்தியில் வாழும் தீர்க்கதரிசிகளுக்கு இறைவேதத்தை அருளிச் செய்யக்கூடியவரே இந்த வானவர்.

இவர் போன்றே மரணம் ஏற்படுத்தும் வானவர் மற்றும் சுவர்க்கம், நரகம் பாதுகாக்கும் வானவர், இறைவன் இட்ட கட்டளைகளைச் செவ்வனே நிறைவேற்றும் வானவர்கள் என்று எண்ணற்றோர் பற்றிய தகவல்கள் இஸ்லாம் மார்க்கத்தில் உள்ளன.

மூன்றாவதாக மனித சமுதாயத்தில் நன்மையை ஏவி, தீயதை விலக்கிக் காட்டும் இறைவேதங்கள், ஆகமங்கள், தீர்க்கதரிசிகளுக்கு அருளப்பட்டிருக்கின்றன.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் வேதம் இறக்கப்பட்டது. வேதம் என்பது நபியவர்களின் உள்ளத்தில் இருந்து வெளியில் வந்தது அன்று. இறைவன் புறத்தில் இருந்து வானவர் ஜிப்ரயீல் மூலம் நபியவர்களுக்கு ஊட்டப்பட்டது திருக்குர்ஆன். நபியவர்களின் வாழ்க்கையில் 23 வருட காலத்தில் சன்னம் சன்னமாக வெளிவந்த திருக்குர்ஆன் இறுதியில் தொகுக்கப்பட்டு இன்று உலகம் முழுவதும் ஓதப்பட்டும் படிக்கப்பட்டும் ஆய்வு செய்யப்பட்டும் வருகிறது.

உலகத்தில் திருக்குர்ஆன் வேதம் இறுதிவேதமாக உள்ளது. இதற்குப் பிறகு உலகத்தில் வேறு எந்தவொரு வேதமும் இறைவன் புறத்தில் இருந்து அருளப்படமாட்டாது என்பதை திருக்குர்ஆன் உறுதிப்படுத்தி இருக்கிறது. திருக்குர்ஆன் வேதம், அதற்கு முன்பு அருளப்பட்ட வேதங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்துவதோடு, முஸ்லிம்கள் அவற்றையும் நம்ப வேண்டும் என்று ஏவி இருக்கிறது.

நான்காவதாக, உலகில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாக்குப்படி 124,000 (ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம்) தீர்க்கதரிசிகள் வந்திருக்கிறார்கள். இவர்களின் பெயர்கள் 25 மட்டுமே திருக்குர்ஆனில் இடம்பெற்றிருக்கின்றன. தீர்க்கதரிசிகள் அனைவரையும் சமமாக ஏற்றுப் போற்றிட வேண்டும் என்று முஸ்லிம்கள் வற்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்திய வரலாற்றில் வரும் 'ரிஷிகள்' என்போர் தீர்க்கதரிசிகளாக வாழ்ந்திருக்க முடியும் என்றும் தமிழகத்தில் இறைவனை ஏற்றும் போற்றியும் வாழ்ந்த ஒரு திருக்கூட்டம் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்' என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்து வேதங்களையும் நம்புவதோடு, எல்லா தீர்க்கதரிசிகளையும் ஏற்றுப் போற்றுவதோடு, அனைவரையும் சமமாகக் கருதிட வேண்டும் என்று முஸ்லிம்கள் ஏவப்பட்டிருக்கின்றனர்.

ஐந்தாவதாக, இறுதித் தீர்ப்பு நாள் வரும் என நம்புவதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. மனித உற்பத்தியை விவரிக்கும் திருக்குர்ஆன், வெளி உலகிற்கு வரும் மனித உயிர், தாயின் கருவறையில் இருக்கும்போது, பத்து மாதங்களுக்குப் பிறகு பரந்த உலகில் பிரவேசிக்க இருப்பதைத் தெரிந்திருக்க முடியாது! அது போலவே, பரந்த உலகில் வாழ்ந்து மடியும் மனித உயிர் மீண்டும் உயிர்த்தெழும்போது, இந்த உலகத்தைவிட மிகமிகப் பெரியதொரு உலகில் பிரவேசிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை!

இவ்வாறு ஆன்மிக ஞானிகள் விரிவான விளக்கங்களைத் தந்து நம்பிக்கையை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இத்தகைய நம்பிக்கையில் தன்னை மூழ்கவைத்துக் கொண்டுள்ள ஒரு முஸ்லிம் ஐம்பெரும் கடமைகளைத் தனது வாழ்வின் நடைமுறையாக ஏற்று நடக்க வேண்டும் என்று வரையறை செய்திருக்கிறது.

''லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மது ரஸலுல்லாஹி'' - வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது நபி, இறைவனின் திருத்தூதர் ஆவார். இதுதான் திருவாக்கியம் - கலீமா.

இரண்டாவது, நாள்தோறும் ஐந்துவேளை இறைவனைத் தொழுவதாகும். மூன்றாவது, வருடத்தில் ரமழான் மாதம் முழுவதும் உண்ணாமல், பருகாமல், உடல் இச்சைகளுக்கு இடம் கொடுக்காமல், பாவம் எதையும் எண்ணாமலும், எத்தகைய பாவச்செயலிலும் ஈடுபடாமலும் நோன்பு இருப்பது ஆகும்.

நான்காவது, ஆண்டு முழுவதிலும் சேர்த்திருக்கும் பொருளில் இருந்து இரண்டரை சதவீதம் ஏழைகளுக்குரிய பங்காக விநியோகிப்பது ஆகும். ஐந்தாவது, வாழ்க்கையில் வசதி வாய்ப்புகள் இருக்கும்பட்சத்தில் ஒரு முறையேனும் மக்காவில் உள்ள கஃபத்துல்லாஹ் சென்று, அதைத் தொடர்ந்து அரபா மைதானத்தில் புனித ஹஜ் பயணத்தை மேற்கொள்வதாகும்.

மேற்கூறப்பட்ட நம்பிக்கைகளுடன், இந்த ஐந்து நடைமுறைகளையும் ஏற்று போற்றி நடக்கும் ஒவ்வொருவரும் முஸ்லிம் என்று கருதப்படுகிறார். முஸ்லிமாக உள்ள யாவரும் பிறருக்குத் தனது கரத்தாலும், நாவாலும் தீங்கு செய்யாதவன் என்று வாழ்த்திட வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

தான் ஏற்றுக்கொண்டு வாழும் நம்பிக்கை, நடைமுறைகளை எல்லோருக்கும் எடுத்துக் கூறுவது முஸ்லிமின் கடமையாகும். ஆனால், மார்க்கத்தைக் கட்டாயமாகத் திணிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. அவரவர் மார்க்கம், அவரவருக்கு உரியது.

'லகும் தீனுக்கும் வலியதீன்' - ஒவ்வொரு சமயம் சார்ந்த சமூகத்திற்கும் அவரவர் ஏற்றுப் போற்றும் வணக்க வழிபாட்டு முறைகள் உண்டு. அதற்கு இடையூறாக எந்தவொரு முஸ்லிமும் தனது வாழ்வில் எவ்வித இடைஞ்சலும் செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது.

உலக மக்கள் யாவரும் ஒரு தாய் மக்கள் ஆவார்கள். 'வசுதைவ குடும்பகம் '- மானுட சமுதாயம் முழுவதும் ஒரே குடும்பம்தான். யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

சமயங்களுக்கு இடையில் ஏற்படுத்தப்படும் குழப்பங்கள் பற்றி, இவ்வுலகில் உங்களுக்குகிடையில் சர்ச்சையும் தகராறும் விளைவிக்க வேண்டாம். இறுதித் தீர்ப்பு நாளின்போது, இத்தகைய சர்ச்சை, தகராறுகளுக்குரிய விடையை இறைவன் அனைவருக்கும் வழங்குவான் என்பதை திருக்குர்ஆன் ஆணித்தரமாக எடுத்துக் கூறி இருக்கிறது.

மனிதர்கள் மத்தியில், பல்வேறு சமயங்களும் நம்பிக்கைகளும் நடைமுறைகளும் என்றும் தொடரக் கூடியவையாகும். மனிதர்களாகிய நாம் நல்லதை நினைப்போம். நல்லதைச் செய்வோம். நல்லதையே ஏவுவோம். நல்லதற்காகவே வாழ்வோம். ஒன்றுபட்டு வாழும் காலம் உலகின் பொற்காலமாகும். அந்தப் பொற்காலத்தை நோக்கிப் பயணிப்போம்.

*நன்றி - தினமணி*

## இன்றைய நாளில்...

- 1762 – கண்டி மன்னருடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனம் ஜோன் பைபசு என்பவரை இலங்கைக்கு அனுப்பியது.
- 1944 – மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலையானார்.
- 1950 – தாய்லாந்தின் மன்னராக பூமிபால் அதுல்யாதெச் 'ஒன்பதாவது ராமா' என்ற பெயரில் முடி சூடினார்.
- 1961 – மேர்க்குரி திட்டம்: அலன் ஷெப்பர்ட் விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது மனிதரும் முதலாவது அமெரிக்கரும் ஆனார்.
- 1976 – புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயருடனிருந்த விடுதலை இயக்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

அமெரிக்கவிலயும் பொருளாதார நெருக்கடி வரப்போகுதாம்... அப்போ 'பைடன் கோ விலேஜ்' போராட்டம் வருமாக்கும்..!



# எம்.பியொருவரின் வாகனம் விபத்து

## 7 பேர் காயம் - வாரியபொலவில் சம்பவம்

பாராளுமன்ற உறுப்பினர் ஜயரத்ன ஹேரத் பயணித்த டிபெண்டர் வாகனமும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் காயமடைந்துள்ளதாக வாரியபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் (03) இரவு வாரியபொல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதுடன் விபத்தில் காயமடைந்த ஏழு பேரையும் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் ஜயரத்ன ஹேரத்துக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என வாரியபொல பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், டிபெண்டர் வாகனத்தின் சாரதியாக இருந்த ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதியும் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருமே இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கெட்டபத்வெஹர பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹேரத் பயணித்த வாகனம் வாரியபொலவில் இருந்து குருநாகல் நோக்கி பயணித்துள்ளது. சிறிய லொறி வலப்புறம் திரும்பியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக வாரியபொல பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# புதிய தொழில் சட்டமொன்றை தயாரிக்க அரசாங்கம் உத்தேசம்

## பெண்கள், விசேட தேவையுடையோரின் உரிமைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படுமென அமைச்சர் மனுஷ அறிவிப்பு



நீண்டகாலமாக திருத்தப்படாமலிருக்கும் சட்டத்துக்குப் பதிலாக, நவீன உலகத்துக்கு ஏற்ற, தொழிலாளர்களின் நலன்களுக்கும் உரிமைகளுக்கும் முக்கியத்துவமளிக்கும் வகையில் புதிய தொழில் சட்டமொன்றை தயாரிக்கவுள்ளதாக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில், கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

2048ஆம் ஆண்டில் வெற்றி பெறுவோம் என்ற ஜனாதிபதியின் தொலை நோக்குடனான நாட்டின் அபிவிருத்தி இலக்கை எட்டும் வகையில் மேற்கொள்ளப்படும் இந்த சட்ட கட்டமைப்புக்கு தொழில் சங்கங்கள், புத்திஜீவிகள் சமூக அமைப்புகள், தொழிற் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்காதவர்கள் உள்ளிட்டோரின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

இந்த சட்டம் குறித்து நாம் குறிப்பிட்டபோது, வழமை போன்றே எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் குறை கூறினார்கள். இவர்கள் எப்பொழுதும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுகின்றனர்.

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதுடன் அவர்களின் கௌரவத்தையும் பாதுகாத்து, சர்வதேச தொழில் அமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய தொழில் சட்டத்தை உருவாக்குவதுடன் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் பாதுகாப்பு, அவர்களின் உரிமை, விசேட தேவைகளை கொண்டுள்ளவர்களின் உரிமையை உறுதி செய்வதும் எமது நோக்கமாகும். மே தினத்தில் மாத்திரம் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் எழுப்பாது அவர்களின் நீடித்த நலனை இலக்காகக்கொண்டு செயற்பட்டு வருகின்றோம் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# பணத்துக்காக திட்டமிட்டு காதலியை கொலை செய்த காதலன் கைது

இளம் யுவதியொருவரின் 50 இலட்சம் ரூபா பெறுமதியான ஆயுள்காப்புறுதி பணத்தை பெறுவதற்காக, நண்பருக்கு 20 இலட்சம் ரூபா தருவதாக குறிப்பிட்டு, காதலியை வாகனத்தால் மோதி கொலை செய்வித்த காதலனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பிட்டிகல மானமிபிட்ட, தல்கஸ்வல நியாகம பிரதேச சபைக்கு அருகில் நின்றிருந்த யுவதியொருவர், கடந்த மாதம் 30ஆம் திகதி சிறிய ரக லொறி மோதி உயிரிழந்திருந்தார்.

இந்த விபத்தில், பிட்டிகல தல்கஸ்வல பகுதியைச் சேர்ந்த 32 வயதான நிரோஷா உதயங்கனி என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த பெண்ணுக்கு திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்த நபரை நேற்று முன்தினம் இரவு பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இந்தக் கொலை சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், சம்பவம் இடம்பெற்ற தினத்தின் மறுநாள் மாபலகம் வீதியில் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் பெண்ணை லொறியால் மோதி கொலை செய்த குறித்த வாகன சாரதி தப்பியோடி தலைமறைவாகி விட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்த காதலி, 50 இலட்சம் ரூபா பெறுமதியான 4 ஆயுள் காப்புறுதிகள் செய்திருந்ததாகவும், அந்த பணத்தை எடுப்பதற்காக இந்த கொலையை திட்டமிட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. தனது உற்ற நண்பனிடம் கொலையை செய்யுமாறு கேட்ட காதலன், அதற்காக 20 இலட்சம் ரூபா தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவத்தைத் திட்டமிட்டதாக சந்தேகிக்கப்படும் குறித்த சந்தேகநபர் நேற்று (04) எல்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்ததுடன், கொலையை செய்த 24 வயதான வாகன சாரதி தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பிட்டிகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நிரந்தர அமைதியை ஏற்படுத்திய தலைவரையே மறந்து விட்டார்கள்

## மத்திய மாகாண ஆளுநர் கவலை

(மாத்தளை நிருபர்)

நாட்டில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான மூன்று தசாப்த கால யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்து, நிரந்தர அமைதியை ஏற்படுத்தி சுதந்திரமாக இயங்கக்கூடிய நிலைமையை உருவாக்கித்தந்த ஒரு அரசியல் தலைவனை மிகவும் அவசரமாக மறந்துபோன மக்களுக்கு மத்தியிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம். நாட்டு மக்கள் செய்நன்றி மறவா மக்கள் இல்லை. மாறாக, செய்யும் நன்றியை சடுதியாக மறக்கும் மக்கள். இப்படிப்பட்ட மக்களுக்கு மத்தியில் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் ஒரு போதும் நன்றியை எதிர்பார்க்க முடியாது என மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே தெரிவித்தார்.

மாத்தளை நகரில் சுமார் 47.5 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்து நவீன மயப்படுத்தும் மாத்தளை பேர்னட் அலுவிஹார விளையாட்டு அரங்கின் அபிவிருத்திப் பணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசியல், சமூகப் பணிகளை செய்யும்போது கல்லடிகளும் சொல்லடிகளும் எம்மை மாறி மாறி வந்து தாக்கிக் கொண்டிருக்கும். இது ஒரு புறமிருக்க, குறைகளை தேடும் சமூக வலைத்தளங்கள் எம்மைப் போன்றவர்களை தாக்கி கொண்டே இருப்பார்கள். நல்லவைகள் அவர்களின் கண்களுக்கு தென்படுவது குறைவு. கெட்டவைகளையும் தவறுதலாக ஏற்படும் குறைகளையும் துருவித்துருவி ஆராய்வதில் தூரநோக்கு சிந்தனையுடையவர்கள்.

47.5 மில்லியன் செலவில் அபிவிருத்தி செய்யப்படும் மாத்தளை பேர்னட் அலிவிஹார விளையாட்டு அரங்கு முழுமையான விளையாட்டு அரங்காக மாற வேண்டுமென்பது இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்கவின் நீண்ட நாள் கனவாகும். இந்த அபிவிருத்தி பணிகள் குறுகிய காலத்தில் முடிவுற்றாலும் உங்களின் சேவைகளை புரிந்து கொள்ள பல தசாப்த காலம் செல்லும். இன்று இங்கு சமுகமளித்திருக்கக்கூடிய விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் இன்றைய பொதுப் பணியின் நாளைய சாட்சியாளர்கள் என்பதை புரிந்து எமது பணிகளை தொடர்வதே காலத்தின் தேவையாகும்.

இவ்விழாவில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க, மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலக்க ரத்ன, மாத்தளை மாநகர ஆணையாளர் மாதவ நிஷாந்த உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பாதுகாப்புச் செயலாளருக்கு போர்வீரர்களின் கொடி அணிவிப்பு



போர் வீரர்கள் நினைவு மாதத்தை முன்னிட்டு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவுக்கு நேற்று முன்தினம் (03) போர்வீரர்களின் கொடி அணிவிக்கப்பட்டுள்ளது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வு) தலைமையிலான குழுவினர், கோட்டே ஸ்ரீஜயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்புச் செயலாளரை சந்தித்தபோது அவர் மீது போர்வீரர்களின் கொடி அணிவிக்கப்பட்டது.

பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கித்சிறி ஏகநாயக்க (ஓய்வு), பிரிகேடியர் ரொஷான் திரிமான்ன, லெப்டினன்ட் கேர்ணல் ரக்ஷித லியனகே மற்றும் மேஜர் அனோஜ் டி சில்வா உட்பட ரணவிரு சேவா அதிகாரசபையின் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 50 ஆயிரம் ரூபா இலஞ்சம்பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

அம்பாறை, தமண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் (03) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

50 ஆயிரம் ரூபா இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் வரிப்பொத்தான்சேனை பிரதேசத்தில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமண பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவருக்கு எதிராக அம்பாறை நீதவான் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள வழக்கில் சாதகமாக தீர்ப்பை பெற்றுக்கொடுப்பதற்காகவே, குறித்த பொலிஸ் சார்ஜன்ட் 50 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ளதாக பொலிஸ் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, குறித்த நபர் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அளித்த முறைப்பாட்டையடுத்து, அவர்களின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான நேற்று முன்தினம் வரிபொத்தான்சேனை பிரதேசத்திலுள்ள இடமொன்றுக்கு மாறு வேடத்தில் சென்ற இலஞ்ச ஊழல் குழுவினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்துள்ளனர். இந்நிலையில், குறித்த பொலிஸ் சார்ஜன்ட் இலஞ்சமாக குறித்த நபரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றபோதே அவரை இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினர் கைது செய்தனர்.

# கட்டாரில் வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாக கூறி மோசடி

வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாக தெரிவித்து நிதி மோசடி செய்த பெண்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மன்னார் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டாரில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்து 06 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்துள்ளதாக மன்னார் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போதே சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த பெண்கள் இருவரும் நேற்று முன்தினம் (03) கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 42 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் (03) மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# புத்தர் காட்டிய வழியில் அனைவரும் ஒன்றிணைவோம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் வெசாக் தின வாழ்த்து

"அமைதியைவிட உயர்வான சந்தோசம் இந்த பூமியில் வேறொன்றும் இல்லை" என புத்தபெருமான் போதித்துள்ளார். எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை சீர்செய்து, நாட்டை மீட்கவும், இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைக்கண்டு இலங்கை மண்ணில் நிலையான அமைதி மலரவும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் விடுத்துள்ள வெசாக் தின வாழ்த்துச் செய்தியில்,

போதிமாதவன் புத்தபெருமானின் பிறப்பு, இறப்பு, பரிநிர்வாணம் அடைந்தமை ஆகிய முக்கிய நிகழ்வுகளை நினைவு கூருவதற்கே விசாக நோன்மதி - வெசாக் நோன்மதி தினத்தை உலகவாழ் பௌத்தர்கள் வெகுசிறப்பாக கொண்டாடி வருகின்றனர். இலங்கையிலும் பக்திபூர்வமான முறையில் பல நிகழ்வுகள் நடைபெறும். கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி மற்றும் வரிசை யுகம் இல்லாது செய்யப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் இம்முறை வெசாக் தின நிகழ்வுகள் பிரம்மாண்டமாக இடம்பெறவுள்ளன.

வெசாக் காலப்பகுதியில் ஊர், கிராமங்கள், நகரங்களில் வாழும் மக்கள் ஒன்றிணைவார்கள். ஒற்றுமையுடன் அலங்கார தோரணங்களை அமைப்பார்கள். உதவிகளை திரட்டி தானம் வழங்குவார்கள். ஒற்றுமை, ஐக்கியம் என்பவற்றின் பலத்தை இதன்மூலம் நாம் காண முடியும். ஆகவே, நம் நாட்டை மீட்கவும் இவ்வாறு அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை. அடுத்த வெசாக்கை இதைவிடவும் சிறப்பான சூழ்நிலையில் கொண்டாடுவதற்கு வேண்டுமெனில் அரசியல், கட்சி வேறுபாடுகளை துறந்து நாம் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றிணைய வேண்டும். இதய சுத்தியுடன் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண முன்வர வேண்டும்.

அன்பு, இரக்கம், கருணை, அமைதி போன்ற வாழ்வில் சிறந்த விடயங்களையே புத்தபெருமான் எமக்கு போதித்துள்ளார். அவர் வழியில் நடந்தால் இந்நாட்டில் ஒருபோதும் இனவாதம், மதவாதம் ஏற்படாது. ஆகவே, வெசாக் தினத்தை கொண்டாடும் அதேவேளை, புத்த பெருமானின் போதனைகளை பின்பற்றி வாழவும் கற்றுக்கொள்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப்பொருளுடன் இருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (03) சாவகச்சேரி மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையின்போது கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகர் பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் நடமாடுவதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளதுடன், இதன்போது 3 கிராம் 710 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மதுவரி திணைக்கள மதுவரிப் பரிசோதகர் ரஷிகரன் தலைமையிலான குழுவினரே இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். கைதான இருவரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 16ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.







இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் கீழ் இயங்கிவரும் பாணந்துறை அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நிகழ்வுகள் நேற்று (04) காலை இடம்பெற்றன. இதன்போது பக்தர்கள் வடம் பிடிப்பதையும் வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமான் வெளி வீதி உலா வருவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களுள் ஒரு பகுதி யினரையும் படங்களில் காணலாம்.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.05.03
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
| --- | --- | --- |
| மஹஜன சம்பத | 5105 | ரூ. 15,410,656.00 |
| கொவிசெத | 3347 | ரூ. 101,040,980.64 |
| ஜாதிக சம்பத | 1560 | ரூ. 10,577,509.20 |
| தன நிதானய | 1135 | ரூ. 88,747,445.60 |
| ராசி சுப பலன் (Handahana) | 414 | ரூ. 2,500,000.00 |
| மெகா பவர் | 1453 | ரூ. 318,962,950.00 |

மஹஜன சம்பத: ஆங்கில எழுத்து A; வெற்றி இலக்கங்கள் 8 4 2 2 3 8

கொவிசெத: ஆங்கில எழுத்து J; வெற்றி இலக்கங்கள் 02 23 37 75

ஜாதிக சம்பத: வெற்றி இலக்கினம் மகரம்; வெற்றி இலக்கங்கள் 8 2 0 9 4 6

தன நிதானய: ஆங்கில எழுத்து F; வெற்றி இலக்கங்கள் 19 20 25 77

ராசி சுப பலன்: வெற்றி இலக்கினம் மகரம்; வெற்றி இலக்கங்கள் 05 13 34 58; விசேட இலக்கினம் மகரம்

மெகா பவர்: ஆங்கில எழுத்து W; சுப்பர் இலக்கம் 11; வெற்றி இலக்கங்கள் 08 14 27 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# போசாக்கற்ற சிறுவர்கள் வீதத்தில் யாழ்ப்பாணம் வெகு முன்னிலையில்!

## வடக்கு ஆரம்பப்பிரிவு உதவி கல்விப் பணிப்பாளர் சற்குணராஜா தெரிவிப்பு





(யாழ்.நிருபர்)

இலங்கையில் போசாக்கற்ற சிறுவர்கள் உள்ள மாகாணமாக வட மாகாணம் காணப்படுகின்ற நிலையில், அதிலும் யாழ்ப்பாணத்திலே அதிகமான சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆரம்பப் பிரிவு உதவி கல்வி பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி ஒன்றில் மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் சிறுவர்களின் உணவு ஆரோக்கியம் தொடர்பான புள்ளி விபரங்களில் வடமாகாணத்தில் சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் காணப்படுவது புள்ளிவிபரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சிறுவர்களுக்கு அதிகம் மாப்பொருளை அடங்கிய உணவுகளையே பெற்றோர்கள் தினமும் வழங்குகிறார்கள்.

இதன் காரணமாக சிறுவர்கள் வெளித்தோற்றத்துக்கு பொலிவானவர்களாக காணப்பட்டாலும் உடலுக்கு தேவையான புரதம், கொழுப்பு, அயன் போன்ற சத்துகள் குறைவாகவே காணப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சிறுவர்களின் போசாக்கு மட்டும் சாதகமான குறிகாட்டியே காட்டுகிறது.

ஏனெனில், குறித்த மாவட்டத்தில் மாப்பொருள் சார்ந்த உணவுப் பொருட்கள் குறைவாகவே கிடைக்கும் நிலையில் கடல் உணவு சார்ந்த உணவுகள் அதிகமாக கிடைப்பதனால் அவர்களின் போசாக்கு மட்டும் அதிகரித்து காணப்படுகிறது.

சிறுவர்கள் நாட்டின் எதிர்கால சந்ததியினர் அவர்களின் உடல் உள ஆரோக்கியம் தொடர்பில் முன்பள்ளிப் பருவத்தில் இருந்தே கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில் சிறுவர்களின் மூளை வளர்ச்சி 4 வயது தொடக்கம் 7 வயது வரை வளர்ச்சி போக்குகள் காணப்படும் நிலையில் அவர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளையும் கிரகித்தல் ஆற்றலையும் வளர்க்க வேண்டும்.

அநேகமான பெற்றோர்கள் முன்பள்ளியில் தமது பிள்ளைகள் கொப்பியில் எழுத வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள நிலையில் அவ்வாறான விடயங்கள் சிறுவர்களுக்கு ஆரோக்கியமான விடயம் அல்ல.

வட மாகாணத்தில் சுமார் 1600 முன்பள்ளிகள் காணப்படும் நிலையில் சகல முன்பள்ளிகளிலும் உலக வங்கியின் நிதி பங்களிப்புடன் மூன்று மாத காலத்துக்கு சத்துணவு திட்டத்தை வழங்குகிறோம்.

உலக வங்கியின் திட்டம் உரிய காலப் பகுதியில் நிறுத்தப்பட்டாலும் சிறுவர்களுக்கான சத்துணவை எவ்வாறு தயாரித்து வழங்க வேண்டும் என்ற ஆலோசனையை ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

ஆகவே, முன்பள்ளியில் கிடைக்கும் சத்துணவு திட்டத்தை தவறாது மாணவர்களுக்கு பெற்று கொடுத்து அவர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னார் முருங்கன் பிரதான வீதியில் சுற்றித் திரிந்த யானை





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி முருங்கன் கட்டுக்கரை பிரதான வீதியூடாக கடந்த புதன்கிழமை (03) மாலை காட்டு யானை ஒன்று திடீரென வீதிக்கு வந்தமையினால் குறித்த வீதியூடாக போக்குவரத்தை மேற்கொண்ட மக்கள் அச்சமடைந்தனர்.

சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வரும் நிலையில் கட்டுக்கரை குளம் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் உள்ள யானை ஒன்று வழி தவறி இவ்வாறு பிரதான வீதி பகுதிக்கு வந்துள்ளது. பின்னர் அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் வீதியால் சென்றவர்கள் குறித்த யானையை துரத்த அவ் யானை கட்டுக்கரை குளம் பகுதியூடாக அப்பகுதியில் இருந்து வெளியேறியது.

# யாழிலிருந்து டுபாய்க்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி



நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணத்தில் இருந்து டுபாய்க்கு வாழைக் குலைகளை ஏற்றுமதி செய்யும் திட்டத்தின் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நிலாவரை சந்தியில் அமைக்கப் பட்டுள்ள வாழைக்குலை பதப்படுத்தல் நிலையத் தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

யாழ். குடாநாட்டில் கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் கதலி வாழைப்பழங்கள் நிலாவரையில் உள்ள வாழைப்பழம் சுத்திகரிப்பு நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு அங்கிருந்து நேரடியாக துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வாழைப்பழங்கள் டுபாய் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

இதன்மூலம் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைப்பதோடு உள்ளூர் விவசாயிகளுக்கும் பெரிதும் நன்மை கிடைக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 10 ஆயிரம் கிலோ வாழைக்குலைகள் வாரந்தோறும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்திட்டமானது அனுராதபுரம் ராஜாங்கனை வாழைப்பழ ஏற்றுமதி திட்டத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சித்தங்கேணியில் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கி வைப்பு







சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையும் வேலணை ஆன்மீக அறக்கட்டளையும் இணைந்து, வேலணை பகுதியில் பல்வேறு உதவித் திட்டங்களை முன்னெடுத்திருந்தன.

அந்தவகையில் 100 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், வேலணை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள், குழந்தைகளுக்கான பால்மா பெட்டிகள், வாழ்வாதார நிதி உதவி மற்றும் 100 மாணவர்களுக்கு தென்னம் பிள்ளைகள் என்பன நேற்று வழங்கப்பட்டன.

சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையின் தலைவர் ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வேலணை மத்திய கல்லூரியின் அதிபர் கிருபாகரன், வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மோகன்தாஸ், முன்னை நாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம், வேலணை வைத்தியசாலை வைத்தியர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மகளுக்கு விஷம் கொடுத்து தலைமறைவான தந்தை

## சாஞ்சிமலையில் பொலிஸாரால் கைது

(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மொக்கா தோட்ட மேற்பிரிவில் தந்தை ஒருவர் தனது 20 வயதுடைய மகளுக்கு விஷம் கொடுத் ததாக சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் (03) இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

இதன்போது பாதிக்கப்பட்ட யுவதி மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியிடம் தனது தந்தை தனக்கு விஷம் கொடுத்ததாக கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் பணிப்புரையின் கீழ் சந்தேக நபர் டிக்கோயா, சாஞ்சிமலை பகுதியில் உறவினர் வீட்டில் தங்கியிருந்தநிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் பாதிக்கப்பட்ட யுவதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார கூறுகையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டைய யுவதியின் தாய் கடந்த 7 மாதங்களுக்கு முன்பு வெளிநாட்டுக்கு சென்றுள்ளார் எனவும் அவருக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# சிவனொளிபாதமலை யாத்திரை நிறைவு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

2023ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை புனித யாத்திரை இன்றுடன் (05) நிறைவு பெறுவதாக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்த கலந்துரையாடல் சிவனொளிபாதமலை விகாரையின் விகாராதிபதி, சப்ரகமுவ மாகாண பிரதான சங்கநாயகர் பெங்கமுவே ஸ்ரீதம்மதித்த நாயக்க தேரர் தலைமையில் நடைபெற்றபோது அவர் இவ்விட யத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதற்கிணங்க, தற்போது சிவனொளிபாதமலை யில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் புனித தந்தம் உட்பட புனிதசிலையை தாங்கிய ஊர்வலம் பெல்மதுளை கல்பொத்தாவல விகாரைக்கு இரண்டு வழிகளில் பாதுகாப்பாக எடுத்து வரப்படும்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பதுளை மாவட்டத்தில் நிலவுகின்ற மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக குருவிகொல பிரதேசத்தில் பாரியமண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளதால் மடுல்சீமை - பிட்டமாருவ வீதி மற்றும் மடுல்சீமை - எகிரிய ஆகிய வீதிகளின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. (நடராஜா மலர்வேந்தன்)







உக்குவளை கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாத்தளை மாவட்ட தமிழ் மொழிமூல பாடசாலைகளில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையேயான வினா விடைப்போட்டி எல்கடுவ தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் எம்.தியாகராஜன் தலைமையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: உக்குவளை செய்தியாளர்)

# கழிவுத் தேயிலையை பதுக்கிய மூன்று பேர் ஹட்டனில் கைது

(மனூர சுதத் செல்லஹேவா)

ஹட்டன் ருவன்புரவில் கழிவுத்தேயிலையை பதுக்கிவைத்திருந்த மூவர் சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (03) கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவற்றை கொண்டுசெல்வதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு லொறிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸாருடன் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 21 ஆயிரத்து 800 கிலோகிராம் கழிவுத் தேயிலை மீட்கப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் ருவன்புர பகுதியைச் சேர்ந்தவர்களென பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கை பாதுகாப்பு படையினரின் தொழில்முறை தரத்துக்கு பாராட்டு






இந்தியாவில் இடம்பெறும் பயிற்சி கற்கைநெறிகளில் கலந்து கொள்ளும் இலங்கை பாதுகாப்பு படையினரின் தொழில்முறை தரத்தை இந்திய விமானப்படைத் தளபதி பாராட்டினார்.

இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் வி. ஆர்.சௌதாரி பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு 03ஆம் திகதி இடம்பெற்றது.

கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு விஜயம் செய்த இந்திய விமானப்படைத் தளபதி பாதுகாப்புச் செயலாளரினால் வரவேற்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய உறவுகளை குறிப்பிட்டுக்காட்டிய பாதுகாப்பு செயலாளர்,நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட சமயத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

இந்தியாவில் நடைபெறும் பயிற்சி கற்கை நெறிகளில் கலந்து கொள்ளும் இலங்கை பாதுகாப்புப் படையினரின் தொழில்முறை தரத்தை இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் சௌதாரி இதன்போது பாராட்டினார்.

மேலும் குறிப்பாக பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தில் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க புதிய வழிமுறைகள் தொடர்பாக ஆராயப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.இந்த சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரிபிரிகேடியர் தம்மிக்க வெலகெதர மற்றும் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் விகாஸ் சூத் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் புலமைப் பரிசில்



(அஷ்ரப் ஏ. சமத்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றும் ஊழியர்களது பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு கொழும்பு தலைமைக்காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சட்டத்தரனி ரஜிவ் சூரிய ஆரச்சி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் க.பொ.த.உயர்தரம், சாதாரண தரம் மற்றும் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு மாதாந்த உதவித் தொகைகளுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உப தலைவர், பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்துக்காக அதிகார சபையின் தலைவர் இவ்வருடம் 2.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மட்டக்களப்பில் ஆசிரியரை தாக்கிய நபருக்கு பிணை

## பாதிக்கப்பட்டவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தேசிய பெண்கள் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர் சங்கத் தலைவரை கடமையேற்க அனுமதிக்க வேண்டாம் என சக ஆசிரியர்களை கேட்டுக் கொண்ட ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை (04) மாலை கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார், தாக்குதலில் காயமடைந்த ஆசிரியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

மட்டக்களப்பு தேசிய பெண்கள் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த மட்டக்களப்பு ஆசிரியர் சங்கத் தலைவர் உதயரூபன் கடந்த செவ்வாய்க்கிழமை கடமையை பொறுப்பேற்பதற்காக பாடசாலைக்குச் சென்றுள்ளார்.இதனை அறிந்த பாடசாலை அபிவிருத்தி சங்கக் குழுவினர் பாடசாலைக்குச் சென்று, கல்வித் திணைக்களத்தில் அவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் இருப்பதாகவும் அதிபர் இல்லாத வேளையில் கையொப்பம் இட்டு கடமையைப் பொறுப்பேற்றமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன் அவரை இங்கு கடமையாற்ற அனுமதிக்கமாட்டோம் எனவும் தெரிவித்தனர்.இந்நிலையில் பாடசாலை பிற்பகல் 1.30 மணிக்கு நிறைவடைந்த போது ஆசிரியர் சங்கத் தலைவரை பாடசாலை கையேட்டில் கையொப்பம் இடுவதற்கும் அனுமதிக்கவில்லை. இதனால் பாடசாலையில் குழப்ப நிலை உருவாகியது. இதனையடுத்து இடமாற்றம் பெற்றுவந்த ஆசிரியர் அங்கிருந்து வெளியேறி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தன்னை பாடசாலை அபிவிருத்திகுழுவைச் சேர்ந்த 10 பேர் கடமையாற்ற அனுமதிக்காது தடுத்ததாக முறைப்பாடு செய்துள்ளார்.இந்த சம்பவத்தையடுத்து மறுநாள் அதாவது புதன்கிழமை காலை 7 மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க குழுவினர் பாடசாலைக்கு முன்னால் ஒன்று கூடி கடமையேற்கவரும் ஆசிரியர் சங்கத் தலைவரை பாடசாலைக்குள் அனுமதிக்க விடாது அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க காத்திருந்தனர்.

இதன்போது பாடசாலையில் கல்வி கற்பித்துவரும் ஆசிரியர் ஒருவர் சக ஆசிரியர்களிடம் ஆசிரியர் சங்கத் தலைவரை கடமையேற்க விடவேண்டாம் என கோரியதையடுத்து அவர் மீது திடீரென சக ஆசிரியர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்த சக ஆசிரியர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு தெரிவித்துவிட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். இதனையடுத்து தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் சக ஆசிரியரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியில் நவீன தொழில்நுட்ப கண்காட்சி

## ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்







நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியின் 20ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நவீன தொழில்நுட்ப கண்காட்சி நேற்று முன்தினம்(03) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில் பாடசாலை மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட "மெய்நிகர்" என்ற தொனிப்பொருளிலான இக்கண்காட்சியை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இரண்டு நாட்கள் இடம்பெற்ற இக்கண்காட்சியானது நவீன காலத்துக்கேற்ப தமது வாழ்க்கை மற்றும் இதர செயற்பாடுகளை எவ்வாறு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்ளலாம் என்ற வகையில் அமைந்திருந்தது. இதன் ஆரம்ப வைபவத்தில் நுவரெலியா கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கண்காட்சியை பார்வையிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த மாணவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் அவர்களை வழிநடத்திய அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்களுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

நவீன உலகை வெல்வதற்காக நவீன தொழில்நுட்பம் சார்ந்த திறமைகளை மேலும் வெளிப்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துக்கு மாணவர்கள் செல்ல வேண்டும் எனவும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் தெரிவித்தார். இந்நிகழ்வில் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அண்டனோ 32 ரக விமானத்துக்கு இந்தியாவினால் உதிரிப்பாகங்கள்



இந்திய விமானப்படை தளபதியினால் இலங்கை விமானப்படையின் அண்டனோ 32 ரக விமானத்துக்கான முக்கிய உதிரிப்பாகங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான எயார் மார்ஷல் அண்டனோ 32 ரக விமானத்துக்கான இரண்டு ப்ரொப்பல்லர்கள் (Propeller) கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் வைத்து இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவிடம் இந்திய விமானப் படை தளபதி எயார் ஷீப் மார்ஷல் விவேக் ராம் சௌதாரியினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலங்கை விமானப்படையின் விமான போக்குவரத்து மற்றும் வான் சக்தியை அதிகரிக்கும் நோக்கில் இந்திய மற்றும் இலங்கைக்கு இடையில் இடம்பெற்ற 7 ஆவது பாதுகாப்பு கலந்துரையாடலின்போது இந்திய அரசிடம் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்திய விமானப்படை தளபதியினால் மேற்படி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

# ஷாதுலிய்யா தரீக்கா

## இலங்கைக்கான புதிய கலீபதுல் குலபாவாக முஹம்மத் ஸூஹுர் ஆலிம் நியமனம்

(பேருவளை செய்தியாளர்)

ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான புதிய கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள காலி அலிய்யா சட்டக் கல்லூரி பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவருமான சங்கைக்குரிய கலீபதுல் குலபா உஸ்தாத் மௌலவி முஹம்மத் ஸூஹுர் ஆலிம் (பாரி) மற்றும் ஷாதுலிய்யா தரீக்காவின் குலபா ரயீஸுல் முகத்தமீன்கள், முகத்தமீன்கள் ஆகியோர்களுக்கான நியமனக் கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும்14 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இலங்கையின் ஷாதுலிய்யா தரீக்கா தலைமைப் பீடமான கொழும்பு உம்மு ஸாவியாவில் அதன் நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் தலைமையில் நடைபெறும்.

ஷாதுலிய்யா உலக ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய ஷேகு ஸஜ்ஜாதா அஷ் ஷெய்க் முஹம்மத் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களால் இலங்கைக்கான ஷாதுலி தரீக்காக்கான கலீபதுல் குலபா ,ரயீஸுல் முகத்தமீன்கள் மற்றும் முகத்தமீன்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவாக இருந்த மர்ஹூம் அப்துல் ஹமீத் (பஹ்ஜி) அவர்களின் மறைவுக்கு பின்னர் புதிய கலீபதுல்குலபாவாக மௌலவி முஹம்மத் ஸூஹுர் ஆலிம் (பாரி) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வைபவத்தில் கொழும்பு உம்முஸாவியா நிர்வாக சபை உறுப்பினர்கள், கலீபாக்கள், உலமாக்கள், ஷாதுலிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்வர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (04.05.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 207.6816 | 220.0472 |
| கனேடியன் டொலர் | 228.2102 | 241.8947 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.5217 | 48.0133 |
| யூரோ | 345.4091 | 363.7030 |
| ஜப்பான் யென் | 2.3166 | 2.4391 |
| சிங்கப்பூர் டொலர் | 234.3962 | 247.5556 |
| ஸ்ரேலிங் பவுன் | 392.6790 | 412.5686 |
| சுவிஸ் பிராங் | 351.2427 | 372.9970 |
| ஐ.அ. டொலர் | 312.5034 | 326.6292 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848.6612 |
| குவைட் | குவைட் தினார் | 1,045.4372 |
| ஓமான் | ஓமான் றியால் | 831.0386 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.5565 |
| சவுதி அரேபியா | சவுதி அரேபிய றியால் | 85.3164 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.1297 |

# எல்லக்கந்தையில் சித்திரை புத்தாண்டு விளையாட்டு போட்டி















ஹொரணை, எல்லக்கந்தை தோட்ட பொது மைதானத்தில் சித்திரை புத்தாண்டு விளையாட்டு போட்டி சமூக ஆர்வலர் சந்தோசம் அஜித்தின் ஒருங்கமைப்பில் யங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினர் ,தோட்ட பொதுமக்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவுடன் இடம்பெற்றது.இந்நிகழ்வில் ஹொரணை தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி டீ.சீ.ஜீவயோகினி, எல்லக்கந்த தோட்ட அதிகாரி மற்றும் தோட்ட தலைமை கண்காணிப்பாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.இந்த சித்திரைப் புத்தாண்டு களியாட்ட நிகழ்ச்சிகளில் சிறுவர், இளைஞர்களுக்கான பல்வேறுபட்ட சிறப்பு விளையாட்டு போட்டிகள் இடம்பெற்றதுடன் போட்டிகளில் பங்கேற்ற வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகளும் வழங்கப்பட்டன. (படப்பிடிப்பு: எஸ்.எம். பிரமோத் தனுஷ்கர்)

# வினாடி வினாப் போட்டியில் கல்முனை சாஹிரா முதலிடம்



(பொலிவேரியன், மாவடிப்பள்ளி செய்தியாளர்கள்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் இரு மொழிமூலம் கல்வி கற்கும் இரு மாணவர்கள் மாகாண மட்டத்தில் அறிவியல் வினாடி வினாப் போட்டியில் சாதனை படைத்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

கல்லடி /கிரான் வித்தியாலயத்தில் ஆங்கில மொழியில் ஏப்ரல் 30ஆம் திகதி இடம்பெற்ற மாகாண மட்ட வினாடி வினாப் போட்டியில் தரம் 11இல் இருமொழி மூலம் கல்வி கற்கும் ஏ.எம்.நஸாத் அஸ்னி முதலாம் இடத்தையும் தரம் 10 இல் இருமொழி மூலம் கல்வி கற்கும் மாணவன் எஸ்.எம்.ஷிபாப் அதிவிசேட தேர்ச்சியும் பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு பயிற்சியளித்த அறிவியல் ஆசிரியர்களுக்கும் இருமொழிக் கல்வி மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கான (இருமொழி) ஒருங்கிணைப்பாளருடன் (இருமொழி) சாஹிராவுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பாடுபட்டமைக்கு பாடசாலை அதிபர் எம்.ஐ.ஜாபிர் உட்பட பிரதி அதிபர்கள், உதவி அதிபர், கல்வி சார், சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.



தேசிய மாணவர் படையணியின் 142ஆவது ஆண்டு நிறைவையொட்டி தேசிய ரீதியிலான மரம் நடும் வேலைத்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை கடேற் அணியினரால் பாடசாலை வளாகத்தில் பயன் தரு மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாடசாலை அதிபர் ஏ.பி.முஜீன், இணைப்பாடவிதானத்துக்குப் பொறுப்பான உதவி அதிபர் ஏ.எல்.சம்சுல் பழீல் கௌரவ அதிதியாகவும் கல்லூரியின் கடேற் அதிதிகளான லெப்டினன்ட் ஏ.ஜீ.எம்.இஸ்ஹாக் மற்றும் இரண்டாம் லெப்டினன்ட் எம்.எம்.அஸ்மி ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அட்டாளைச்சேனை செய்தியாளர்)



வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் புத்தாக்க ஆய்வுகூடம் பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் புதன்கிழமை (03) திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ.அஜ்மீர், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் என்.சஹாப்தீன், வை.அஹமட் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹரீஸ், பிரைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலய அதிபர் எல்.ரீ.எம்.சாதிக்கீன், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.அன்வர், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)







முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 131ஆவது ஜனன தினம் கல்லடி - உப்போடையில் உள்ள மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள அடிகளாரின் சமாதியில் புதன்கிழமை(03) அனுஷ்டிக்கப்பட்டது. சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபைத் தலைவர் க.பாஸ்கரன், செயலாளர் ச.ஜெயராஜா மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்




(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை ,வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் புதன்கிழமை(03) இடம்பெற்றது.

மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரின் கோரிக்கைக்கமைவாக குணாளனின் முயற்சியின்கீழ் மறைந்த சுரேஸ்குமாரின் நினைவாக பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கண்டியா தொண்டு நிறுவனத்தினால் ஈச்சிலம்பற்று சண்பகா வித்தியாலயம், இலங்கை துறைமுகம் இந்துக் கல்லூரி மற்றும் திருவள்ளுவர் வித்தியாலயம் என்பவற்றில் கற்கும் மிகவும் வறிய நிலையில் உள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் உள்ள 66 மாணவர்களுக்கு இதன்போது கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் த.பிரணவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெறும் புத்தாண்டு விளையாட்டு திருவிழா நலன்புரிச்சங்கத் தலைவர் டாக்டர் ஏ.ஜி.எம்.ஷபீ தலைமையில் வைத்தியசாலை வளாகத்தில் அண்மையில் (30) இடம்பெற்றது. இந்நிகழ்வில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் சத்திர சிகிச்சை விசேட நிபுணர் வைத்தியர் ரிப்ஷான் ஜெமீல், வைத்தியர்கள், நலன்புரிச்சங்க செயலாளரும் விடுதி மேற்பார்வையாளருமான ஏ.சீ. நக்கீப், தாதியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், நிறைவேற்று குழு மற்றும் விளையாட்டுக் குழு உறுப்பினர்கள், சுகாதார உதவியாளர்கள், சிறுவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)



வெசாக் தினத்தையொட்டி அம்பாறை நகர் வெசாக் கூடுகளால் அலங்கரிக்கப்பட்டு வருகின்றது. இதற்கமைய அலுவலகமொன்றில் உத்தியோகத்தர்கள் இணைந்து வெசாக் கூடுகள் தயாரிப்பதைக் காணலாம்.

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# Techlink Technology Campus இன் வருடாந்த பரிசளிப்பு விழா





(எஸ்.எம்.ஸாகிர்)

Techlink Technology Campus நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா சம்மாந்துறை அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பீ.தைசீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை தலைமை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் கலந்து கொண்டதோடு, கௌரவ, சிறப்பு அதிதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது இக்கல்வி நிறுவனத்தில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களான ஏ.ஆர்.எம். தஸ்னீம், ஏ.சி.எம்.ஆகில், ஏ.ஆர்.எம்.முஜாஹித், ஏ.எஸ்.எம்.ஹிஷாம், யூ.எல்.எம்.அப்றத், எம்.டி.எம்.நாஸிக், ஜீ.ஹனீட் அஹமட், என்.எம்.ஜீஸான், எப்.எம்.ஹிஜாஸ், எஸ்.எம்.ஸக்கீ, எம்.பி.எம்.சாஜஹான், எப்.எம். ஷம்ரி, எம்.எஸ்.எம்.சஜீஹ், எம்.ஏ.எம்.அதீப், ஆர்.ஹஸ்ஸான் அஹமட், எம்.ஐ.எம். ஹஸ்ரிப், ஏ.ஜி.அஹமட் உமைர், என்.எம்.நிப்ராஸ், வை.எல்.எம்.மிர்தாஸ், ஐ. அஹ்மத் இஸ்குல்லாஹ், கே.சுஜாத் அஹமட், ஏ.கே.பாத்திமா நப்லின், ஆர். பாத்திமா சிம்றா, எச்.ஹஸீனா, ஏ.ஜி.அப்றோஸா, ஏ.பாத்திமா நுஸைபா, எம்.எப். தூபா செறோன், ஏ.ஜி.பாத்திமா இன்ஸிறா, பி.பர்ஹா மரியம், ஏ.எம்.அக்ஷயா பானு, எல். பாத்திமா ஹுஸ்மா, ரீ.எல்.பாத்திமா நிரோஷா, ஏ.ஜி.பாத்திமா இஹ்ஸானா, ஏ.எம். பாத்திமா சஜா உட்பட 50இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது நிகழ்ச்சிகளை சுயாதீன அறிவிப்பாளர் ஏ.எம்.இன்ஸாப் தொகுத்து வழங்கினார்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(வாழைச்சேனை செய்தியாளர்)

கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகனேரி பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை காட்டு யானை தாக்கியதில் புதன்கிழமை(03) உயிரிழந்துள்ளார்.

சுற்றுலா விடுதி வாகனேரியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான க.ஜெயந்தன் (வயது24) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். வழக்கம் போல் மாடு மேய்க்கும் தொழிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பும் வழியில் வீட்டின் அருகாமையில் நின்ற யானை இவரைத் தாக்கியுள்ள நிலையில், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை பொலிஸார், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி வ.இரமேஸ் ஆனந்தன் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தனர்.

குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் கடந்த 3 நாட்களுக்கு முன்பும் வீதியால் சென்ற நபர் ஒருவரை துரத்தி தாக்கியதாகவும் அதிர்ஷ்டவசமாக அவர் யானையின் தாக்குதலில் இருந்து உயிர்த்தப்பியதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, குறித்த பிரதேசங்களில் யானை வேலி அமைத்து பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்முனை மாநகர சபை எல்லையினுள் இறைச்சிக்கடைகளை 3 நாட்களுக்கு மூடுக!

(பாறுக் ஷிஹான், மருதமுனை செய்தியாளர்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற மாட்டிறைச்சிக் கடைகள், ஆட்டிறைச்சிக் கடைகள் மற்றும் கோழியிறைச்சிக் கடைகள் யாவும் மூடப்பட வேண்டும் என மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பணித்துள்ளார்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக நாடு முழுவதும் நேற்று 04ஆம் திகதி வியாழக்கிழமை முதல் நாளை 06ஆம் திகதி சனிக்கிழமை வரையான 03 நாட்களுக்கு மாடு, ஆடு மற்றும் கோழி என்பன அறுத்து, விற்பனை செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், மேற்படி மூன்று தினங்களும் கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற மேற்படி கடைகள் யாவும் மூடப்பட வேண்டும் என மாநகர ஆணையாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் கல்முனை மாநகர சபை எல்லையினுள் சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை, மருதமுனை, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது, கல்முனை மாநகர பகுதிகளில் அதிகளவில் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி, கோழியிறைச்சிக் கடைகள் இயங்கி வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை, கல்முனை மாநகர சபை எல்லையினுள் மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்கு சில இறைச்சிக்கடை உரிமையாளர்கள் உதாசீனமாக செயற்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அண்மையில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இறைச்சிக் கடை உரிமையாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது அவர்களது இணக்கப்பாட்டுடன் கட்டுப்பாட்டு விலை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் தனி இறைச்சியை 2000 ரூபாவுக்கும் 200 கிராம் முள் சேர்க்கப்பட்ட ஒரு கிலோ கிராம் இறைச்சியை 1800 ரூபாவுக்கும் விற்பனை செய்வதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இவ்விலைப்பட்டியலை அனைத்து இறைச்சிக் கடைகளிலும் காட்சிப்படுத்தும் பொருட்டு குறித்த விலைப்பட்டியல் ஆணையாளரினால் இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. ஆனால், சில இறைச்சிக் கடை உரிமையாளர்கள் குறித்த கட்டுப்பாட்டு விலையை மீறி தான்தோன்றித்தனமாக விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாக குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு, போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலகம் மற்றும் போரதீவுப்பற்று பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் என்பன இணைந்து சுவிஸ் உதயம் எனும் கிழக்கு மாகாண நிறுவனத்தின் அனுசரணையில் 'உதிரமீந்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுத்த இரத்ததான முகாம் போரதீவுப்பற்று பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(02) பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்திய இரத்த வங்கி வைத்திய அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படை, வெல்லாவெளி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், இளைஞர் யுவதிகள், பொது மக்கள் மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்)

# அபராதம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்ணகிபுர வீதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வாகன உரிமையாளர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை(04) ஆஜர்படுத்தப்பட்டபோது 15ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# கல்முனை அல்-மிஸ்பாவில் வாய் சுகாதார விழிப்புணர்வு



(மாளிகைக்காடு செய்தியாளர், பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக பிராந்திய வாய் சுகாதாரப் பிரிவினால் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட கல்முனை கல்வி வலய கமு/கமு/அல்-மிஸ்பா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான வாய் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வு புதன்கிழமை (03) நடைபெற்றது.

சர்வதேச வாய்ச்சுகாதார தினத்தையொட்டி தொடர்ந்தேர்ச்சியாக பிராந்திய வாய் சுகாதார நிபுணர் வைத்தியர் எம்.எச்.கே.சருக்கினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற நிகழ்வுகளில் ஒரு அங்கமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி, அல்-மிஸ்பா வித்தியாலய பிரதி அதிபர், சுகாதார உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது மாணவர்களினால் வாய்ச் சுகாதாரம் தொடர்பான நிகழ்வுகளும் முன்னிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***சாப்பாட்டுபார்சலும், வஷ்சும் அனுப்பி ஆட்கள கூட்டி கூட்டம் நடத்துனவங்க இந்த மேதினத்தில் விசேடமாக சாராயக்குப்பியும் கொடுத்து பிள்ளையாண்ட கட்சி மேதினம் நடத்துனவங்களாம் எண்டு மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் சொன்னவர் எலுவா? ஆக்களிட்ட றிசிட்டு கொடுத்து காசிவாங்கினமாதிரி பற்றுச்சீட்டுகள முகநூலில காண்பித்தவங்க அப்ப அந்த காசி கால் குப்பி வாங்கத்தான் போல.. அதுசரி, இந்தமுற மகிந்த மாமாட மகன் நாமல கூப்பிடல்ல எலுவா?***

# கல்முனை ஸாஹிரா கல்லூரி வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றம்

(மாளிகைக்காடு செய்தியாளர்)




கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மற்றும் ஸாஹிரா கல்லூரி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாடசாலையை விட்டு வீடு செல்லும் நேரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஸாஹிரா கல்லூரி வீதியினை ஒரு வழிப்பாதையாக மாற்றுவதற்கான அறிவிப்புப் பலகையினை கல்முனை வீதி அபிவிருத்தித் திணைக்களம் புதன்கிழமை(03) பொருத்தியுள்ளது.

இதற்கமைவாக, பாடசாலை ஆரம்பிக்கும் நேரங்களில் காலை 7.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை மற்றும் பாடசாலை விடும் நேரங்களில் மதியம் 1.30 மணிமுதல் 2.30 மணிவரை வெள்ளிக்கிழமை பாடசாலை விடும் நேரமான காலை 11.00 மணிமுதல் 12.00 மணிவரை குறித்த நேரங்களில் பிரதான வீதியிலிருந்து ஸாஹிரா கல்லூரி வீதிக்கு எந்தவித வாகனங்களும் உட்செல்ல முடியாதவாறு ஒரு வழிப்பாதையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.முஹம்மட் முனாஸ் தெரிவித்தார்.

மேலும், குறித்த பாடசாலைகள் ஆரம்பிக்கும் மற்றும் பாடசாலை விடும் நேரங்களில் வாகன சாரதிகள் பிரதான வீதியிலிருந்து ஸாஹிரா கல்லூரி வீதிக்கு உட்செல்வதை தவிர்த்து மாற்று வீதிகளை பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு மாணவிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் (வேன், கார்) முச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட மோட்டார் சைக்கிள்கள் பாடசாலையை விட்டு இருமருங்கிலும் 50 மீற்றர் தொலைவில் வாகன சாரதிகள் மாணவர்களை இறக்கி விடுதல் தொடர்பான அறிவிப்புப் பலகையும் பொருத்தப்பட்டுள்ளது.

பாடசாலை சமூகத்தினரினதும் பெற்றோர்களினதும் நீண்ட கால தேவையை அறிந்து அவர்களின் அசௌகரியங்களை போக்குமுகமாக பொறியியலாளர் முனாஸின் நேரடி வழிகாட்டலிலும் கண்காணிப்பிலும் இப்புதிய போக்குவரத்து நடைமுறை விரைவில் அமுலுக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பிலான கலந்துரையாடலொன்று சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது. அந்தக் கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர், கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஜெளஸி அப்துல் ஜப்பார், கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபீர், கல்முனை மஹ்மூத் மகளிர் தேசிய கல்லூரி அதிபர் யூ.எல்.எம்.அமீன், சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துள் கரீம், கல்முனை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி, பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஒழுக்காற்று பிரிவு ஆசிரியர்கள், பிராந்திய ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு எடுத்த தீர்மானத்தின் அடிப்படையிலேயே இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குள் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலியார் வீதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி, உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு சென்று ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்த 1000 மில்லிகிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை(04) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 11ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

★★★★★★

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதூர்நகர் பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி, உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்த 750 மில்லிகிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை(03) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 16ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

★★★★★★

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனவ்வரா வீதியில் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவரையும், டீன்ஸ் வீதியில் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவருமாக இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் ஹெரோயின் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசங்களுக்கு சென்று நபர்களை கைது செய்து வியாழக்கிழமை(04) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

# நீதிமன்றக் கூண்டில் ஏறிய நபர் தற்கொலைக்கு முயற்சி

(அப்துல்சலாம் யாசீம்)

நீதிமன்ற எதிரி கூண்டில் ஏறிய சந்தேக நபரொருவர் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவமொன்று வியாழக்கிழமை(04) திருகோணமலை மஜிஸ்ரேட் நீதவான் நீதிமன்றில் பதிவாகியுள்ளது.

சட்டவிரோத ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் திருகோணமலை நீதவான் நீதிமன்ற எதிரிக்கூண்டில் முற்படுத்தப்பட்டபோது நீதவானுக்கு முன்னால் தன்வசம் வைத்திருந்த சவரக்கத்தியால் கழுத்தை அறுத்துக்கொண்டுள்ளார்.

திருகோணமலை - சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறையைச் சேர்ந்த யோகதாசன் லக்ஸன் (வயது25) என்பவரே தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

சட்டவிரோதமாக ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், வியாழக்கிழமை திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, எதிரிக் கூண்டில் நின்ற நிலையிலேயே தனது கைவசம் மறைத்து வைத்திருந்த சவரக்கத்தியைக்கொண்டு கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார் எனவும் கழுத்தில் சிறுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# போதைக்கு எதிராக சுவரொட்டி பிரசாரம்





(மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகம், ஏறாவூர் நகர பிரதேச செயலகம், இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை பொலிஸார் ஆகியோர் இணைந்து போதைக்கு எதிரான சுவரொட்டி பிரசாரமும் துண்டுப்பிரசுர விநியோக நிகழ்வும் ஏறாவூர் பொலிஸ் நிலைய சந்தியில் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் தலைமையில் புதன்கிழமை(03) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் உட்பட மாவட்ட, பிரதேச செயலக, இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள இதமளி ஆதரவு மையத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1926 பொறிக்கப்பட்டு, போதைக்கு எதிரான வாசகங்கள் உள்ளடங்கிய ஸ்டிக்கர்கள் பிரதேச பொதுப் போக்குவரத்து வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன், வீதிகளில் பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

இத்திட்டம் யாழ்ப்பாண மாவட்ட மருத்துவ பீட பழைய மாணவர் சங்க நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து பிரதேச செயலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### அதிர்ச்சியில் நியூயோர்க்

## ஓடும் ரயிலில் கறுப்பின இளைஞர் கழுத்து நெரித்துக் கொலை



அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஓடும் ரயிலில் கறுப்பின இளைஞரொருவர் 3 வெள்ளை இன இளைஞர்களால் கழுத்து நெரித்து கொல்லப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு நோக்கிச் சென்ற எஃப் ரயிலில் பயணித்த சுமார் 30 வயது இளைஞரொருவர் சக பயணிகளிடம் கோபத்தில் கத்தியவாறு தகராறில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து, அவரை ஒருவர் பின்னாலிருந்து கழுத்தை நெரித்தவாறு பிடித்து கீழே தள்ளி விட்டபோது மற்றைய இருவரும் அவரது கைகளை பிடித்துக் கொண்டனர்.

பயணியொருவர் இக்காட்சிகளை பதிவு செய்த நிலையில், பிராட்வே-லாஃபாயெட் நிலையத்துக்கு ரயில் வந்தடைந்தது. அங்கு வந்த பொலிஸார் தாக்குதலுக்குள்ளானவரை பரிசோதித்த போது அவர் இறந்தது தெரியவந்தது. உயிரிழந்தவர் மற்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் குறித்த விபரங்களை பொலிஸார் திரட்டி வருகின்றனர்.

### புட்டினை கொல்ல சதி; கிரெம்ளின் மாளிகை மீது மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் தாக்குதலுக்கு பதிலடி

## உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்; 21 பேர் உயிரிழப்பு; 48பேர் படுகாயம்



உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 21பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 48 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

உக்ரைன் – ரஷ்யா இடையேயான போர் நேற்று 436ஆவது நாளாகவும் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்த போரில் உக்ரைனுக்கு ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை மேற்கத்தேய நாடுகள் வழங்கி வருகின்றன.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினை கொல்ல கிரெம்ளின் மாளிகையை குறிவைத்து ட்ரோன் தாக்குதல் நடத்த முயற்சி நடந்ததாக ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.

கிரெம்ளின் மாளிகையை இலக்கு வைத்து செவ்வாய்க் கிழமை நள்ளிரவு பறந்த 2 ட்ரோன்களை, மின்சார ரேடார் மூலம் சுட்டு வீழ்த்தியதாக தெரிவித்துள்ள ரஷ்யா, இது பயங்கரவாதத் தாக்குதல் முயற்சி எனவும் இதற்கு உக்ரைன் தான் காரணம் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

மேலும், சம்பவம் நடந்தபோது ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கிரெம்ளின் மாளிகையில் இல்லையெனவும் இதில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ள ரஷ்யா, இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளையில், கிரெம்ளின் மாளிகை மீதான ட்ரோன் தாக்குதல் முயற்சிக்கும் உக்ரைனுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா நேற்று அதிரடி தாக்குதல் நடத்தியது. உக்ரைன் தலைநகர் கீவ் மீதும் கெர்சன் நகர் மீதும் ரஷ்யா அடுத்தடுத்து ஏவுகணைகளை வீசி தாக்கியது.

கெர்சன் நகர் மீது ரஷ்யா ஏவிய ஏவுகணைகள் ரயில் நிலையம் மற்றும் நவீன சந்தையை தாக்கின. இந்த தாக்குதலில் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன் 48 பேர் படுகாயமடைந்தனர்.

கீவ் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்பு குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. ஜனாதிபதி மாளிகை மீது உக்ரைன் நேற்றுமுன்தினம் ட்ரோன் தாக்குதல் நடத்திய நிலையில் அந்த தாக்குதலுக்கு பதிலடியாக ரஷ்யா அடுத்தடுத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான மோதல் மீண்டும் உக்கிரமடைந்துள்ளது.

## உலக வங்கி தலைவராக இந்தியர் ஒருவர் தெரிவு



உலக வங்கித் தலைவராக அமெரிக்கா வாழ் இந்தியர் அஜய் பங்கா போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலக வங்கித் தலைவர் பதவிக்கு அமெரிக்கா வாழ் இந்தியர் அஜய்பங்கா விண்ணப்பித்திருந்தார். அவரை எதிர்த்து எவரும் விண்ணப்பிக்கவில்லை.இதனையடுத்து அஜய்பங்கா ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி முதல் அடுத்த 5 ஆண்டுகளுக்கு அஜய்பங்கா உலக வங்கியின் தலைவராக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பனாமா எண்ணெய் கப்பலை சிறைப்பிடித்த ஈரான்



பனாமாவுக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பலொன்றை ஈரான் சிறைப்பிடித்துள்ளது.

பனாமா நாட்டுக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல் நேற்றுமுன்தினம் பாரசீக வளைகுடா பகுதியில் சென்றுகொண்டிருந்தது. ஹார்முஸ் நீரிணை பகுதியில் எண்ணெய்க் கப்பலை வழிமறித்த ஈரான் கடற்படை அதனை சிறைப்பிடித்துள்ளது.

ஒரே வாரத்தில் ஈரான் சிறைப்பிடிக்கும் இரண்டாவது எண்ணெய்க் கப்பல் இதுவென அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட எண்ணெய்க் கப்பல் 'நியோவி' என அடையாளம் காணப்பட்டுள்ளது. கப்பலை சுற்றி ஈரான் கடற்படையினர் இருக்கும் புகைப்படங்களையும் அமெரிக்க கடற்படை வெளியிட்டுள்ளது. எண்ணெய்க் கப்பல் கைப்பற்றப்பட்டுள்ளமை குறித்து ஈரான் உடனடியாக எந்த தகவலையும் வெளியிடவில்லை.

## மெக்சிகோ இராணுவத்துக்கு துருக்கியின் அன்புப் பரிசு



துருக்கி இராணுவம், மெக்சிகோ இராணுவத்துக்கு ஜேர்மன் ஷெபெர்ட் இன நாய் ஒன்றை பரிசளித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட்ட போது, அங்கு மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த மெக்சிகோ இராணுவத்தைச் சேர்ந்த Proteo என்ற மோப்ப நாய் உயிரிழந்தது.

அதற்கு ஈடாக, Arkadas என பெயரிடப்பட்ட இந்த நாயை, துருக்கி, மெக்சிகோவுக்கு பரிசளித்துள்ளது.

பிறந்து 3 மாதமேயான இந்த நாய்க்கு பயிற்சி அளிக்கப்பட்டு மெக்சிகோ இராணுவத்தின் மோப்ப நாய் பிரிவில் சேர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மியன்மாரில் 2,153 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு



மியன்மரரில் 2,153 அரசியல் கைதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

பொதுமன்னிப்பு வழங்கப்பட்டவர்களுள் இராணுவ ஆட்சியாளர்களால் சிறையில் அடைக்கப்பட்ட அரசியல் கைதிகள் அடங்குகின்றனரா என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகத் தெரிவித்து, தேசிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஆங் சான் சூகி தலைமையிலான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கடந்த 2021ஆம் ஆண்டு கவிழ்த்தது. அப்போது ஆங் சான் சூகி உட்பட ஆயிரக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## புஜாராவின் தலைமையில் விளையாடும் ஸ்மித்

(ரமணி)



டெஸ்ட் கிரிக்கெட்டின் 2ஆவது சம்பியனை தீர்மானிக்கும் 2023 ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் உலக கோப்பையின் மாபெரும் இறுதிப் போட்டி எதிர்வரும் ஜூன் 7 முதல் 11 வரை இங்கிலாந்தின் லண்டன் ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. அவுஸ்திரேலியா - இந்திய ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

புஜாரா இங்கிலாந்தில் கௌண்டி சம்பியன்ஷிப் தொடரில் அபாரமாக செயல்பட்டார். புஜாரா தற்போது மீண்டும் அந்த தொடரில் சசக்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். கடந்த வருடம் சதங்கள், இரட்டை சதங்களை விளாசி மிகச்சிறந்த செயல்பாடுகளை வெளிப்படுத்திய காரணத்தால் அந்த அணி நிர்வாகம் புஜாராவை தங்களது கேப்டனாக அறிவித்துள்ளது.

இந்த சீசனிலும் சதமடித்து அவரும் சிறப்பாகவே செயல்பட்டு வரும் நிலையில் டெஸ்ட் சாம்பியன்ஷிப் ஃபைனல் மற்றும் ஆஷஸ் தொடருக்கு தயாராகும் வகையில் ஐபிஎல் தொடரில் விலை போகாத அவுஸ்திரேலியாவின் நம்பிக்கை நட்சத்திரம் ஸ்டீவ் ஸ்மித் அதே சசக்ஸ் அணியில் 3 போட்டிகளில் விளையாட ஒப்பந்தமாகியுள்ளார்.

## சிறந்த வீரருக்கான பரிந்துரைப் பட்டியலில் பிரபாத்

ஐ.சி.சியின் ஏப்ரல் மாதத்துக்கான சிறந்த வீரருக்கான பரிந்துரைப் பட்டியலில் இலங்கை டெஸ்ட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் பிரபாத் ஜயசூரிய பெயரிடப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) சார்பில் ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயற்படும் வீர வீராங்கனைக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. இதன்படி கடந்த ஏப்ரல் மாதம் சிறப்பாக செயல்பட்ட மூன்று வீரர்களுக்கான பரிந்துரை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டது.

அயர்லாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் 17 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் இடம்பிடித்ததன் மூலம் பிரபாத் இதில் இடம்பெற்றுள்ளார். அடுத்தபடியாக பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பக்கர் ஸமான், நியூசிலாந்து வீரர் மார்க் செப்மன் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். முன்னதாக 2022ஆம் ஆண்டு ஜுலை மாதமும் ஐ.சி.சி. இன் மாதாந்த சிறந்த வீரருக்கான பரிந்துரையிலும் பிரபாத் ஜயசூரிய இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






TATA IPL

**இன்றைய போட்டி**

போட்டி இல - 48
ராஜஸ்தான் எதிர் குஜராத்
நேரம் - இரவு 7.30
இடம் - ஜெய்ப்பூர்

## தேசிய ரீதியில் கூடைப்பந்தாட்டத்தில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு கௌரவம்



(மட்டக்களப்பு, கல்லடி நிருபர்கள்)

இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கனிஷ்ட தேசிய கூடைப்பந்தாட்ட (பிரிவு- 2) சுற்றுப்போட்டியில் தேசிய ரீதியில் சம்பியன் பட்டம் வென்ற மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 23 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணியினரை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பாடுமீன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கூடைப் பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பொறியியலாளர் எஸ்.ஜெயன் பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இயேசு சபைத்துறவி வணக்கத்துக்குரிய அருட்தந்தை போல் சற்குணநாயகம், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் டி.சி. ரொசாரியோ, பொருளாளர் எஸ்.சுதாகர், உபதலைவர் எம்.பரணிதாசன், நிர்வாகசபை உறுப்பினர் சுரேஷ் ரொபட், மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் கே. ராஜேந்திரா, செயலாளர் கே.ஜே. பிரியேந்திரன், அணி பயிற்றுவிப்பாளர் வி. விவேக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மத்திய மாகாண மகளிர் குத்துச் சண்டைப் போட்டி; கண்டி ஹேமமாலி மகளிர் கல்லூரி சம்பியன்



(கண்டி நிருபர்)

மத்திய மாகாண மகளிர் குத்துச் சண்டைப் போட்டியில் கண்டி ஹேமமாலி மகளிர் கல்லூரி சம்பியனாகி அத்துல ஜயவர்தன சவால் கேடயத்தை வென்றது. சிறந்த வீராங்களையாக பிலிமத்தலாவ, தீராநந்த வித்தியாலய மாணவி அமீசா ஜயதிலக தெரிவு செய்யப்பட்டார்.

பிலிமத்தலாவ, தீராநந்த வித்தியாலய மண்டபத்தில் இப்போட்டிகள் இடம் பெற்றன. முதலாம் இடத்தை ஹேமமாலி வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை ஸ்ரீ பெரகும் வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை தீராநந்த வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் இதில் போட்டியிட்டன.

## தேசிய மட்ட கபடி போட்டியில் சம்பியனானது நிந்தவூர் அல்-மதீனா

(நூருல் ஹுதா உமர்)




பிலியந்தல சோமாவீர விளையாட்டு மைதானத்தில் கடந்த ஏப்ரல் 29முதல் 30 ஆகிய தினங்களில் இடம்பெற்ற நிப்போன் லயன்ஸ் 7 தேசிய மட்ட கபடி சம்பியன்ஷிப்பில் 20 வயது பாடசாலை அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டியில் வவுனியா, ஈரளப்பெரியகுளம் பரகும் மகா வித்தியாலயத்தை வீழ்த்தி கல்முனை கல்வி வலயத்தின் நிந்தவூர் அல்-மதீனா மஹா வித்தியாலயம் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பாடசாலைக்கும் இவ் அணியை பயிற்றுவித்து வழிநடத்திய ஆசிரியர் முஹம்மட் இஸ்மத், தேசிய கபடி அணி தலைவரும் இப் பாடசாலையின் விளையாட்டு பயிற்றுவிப்பாளருமான எம். அஸ்லம் சஜா போன்றோருக்கும் முக்கியஸ்தர்கள் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். இப்போட்டி தொடரில் சுமார் 20க்கும் அதிகமான அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7